Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

யாழ்ப்பாணத்திலும்

"வந்துவிட்டது"

டிஜிட்டல் பெயர்ப்பலகைகள்
டிஜிட்டல் பனர்கள்
டிஜிட்டல் பிறின்ரிங்
அடையாள அட்டைகள்
வாகன விளம்பரங்கள்

ஒரு முறை வந்துபாருங்கள் தரத்தை நீங்களே உணருவீர்கள்

மிராக்கில் மீடியாவேக்ஸ் (பிறைவேற்) லிமிற்டட்
768,பருத்தித்துறை வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2225640,0773126471

MMW

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 09 ஹிஜ்ரி 1427 ஸபர் 22 (23.03.2006) வியாழக்கிழமை இதழ் 172

# போராளிகளின் அரசியல் பணிக்கு

## 28 நிபந்தனைகள் அரசு விதிப்பு

கொழும்பு —

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில். போராளிகள் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 28 நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு போராளிகளை அனுப்பி வைக்கும் தீர்மானம் நிறுத்தப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் செயலகங் களில் தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடி ஏற்றக்கூடாது.

எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)


## எவரும் நிபந்தனை விதிக்க முடியாது!

கொழும்பு —

மக்களுடன் போராளிகள் அரசியல்பணிகள் செய்வதற்கு எவரும் நிபந்தனை விதிக்க முடியாதென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போராளிகள் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நிபந்தனைகளை விதித்துள்ளதைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த நிலைப்பாட்டை தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

போராளிகள் அரசியல் பணிகள் செய்வதற்கு அரசாங்கம் நிபந்தனைகளை விதித்துள்ளமை ஜெனிவாப் பேச்சுக்களின் போது ஏற்பட்ட இணக்கப்பாட்டை அர்த்தமற்றதாக மாற்றியுள்ளதாகவும் தமிழீழ அரசியல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)





# தாக்குதல் தொடர்ந்தால் பேச்சு ஒத்திவைக்கப்படும்

## அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

லண்டன் —

இராணுவத்தினரின் உதவியுடன் துணை ஆயுதக் குழுவினரால் நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால் ஜெனிவாப் பேச்சுக்களை ஒத்திப்போடும் நிலை ஏற்படும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு கூறினார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவத்ததாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்துடன் சேர்ந்து துணை ஆயுதக் குழுவினர் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தினால் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த மீறல் பட்டியல் நோர்வேயிடம் கையளிப்பு!

கொழும்பு —

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்ற முதல் சுற்றுப்பேச்சின் பின்னர்- அரசதரப்பில் மீறப்பட்ட போர் நிறுத்த மீறல்கள் குறித்த பட்டியலை விடுதலைப்புலிகள் நோர்வே அரசிடம் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சியில் கடந்த வாரம் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சந்தித்தபோது இந்த பட்டியல் கையளிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

நாளைய இதழில்

புலிக்கொடியை இறக்குமாறு

வவுனியாவில் நேற்று

## நாளைய இதழில்

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான நாகதமிழிந்திரனின் தமிழ் மற்றும் செ.அருட்குமரனின் பொது சாதாரண பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் வெளிவரும்.

உங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள்

# புலிக்கொடியை இறக்குமாறு இராணுவத்தினர் நிர்ப்பந்தம்!

## திருநெல்வேலி பகுதியில் பதற்றநிலை

யாழ்ப்பாணம் —

திருநெல்வேலி உயர் தொழில் நுட்பக்கல்லூரி நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று மாலை பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு மாணவர்கள், விரிவுரையாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

இதனால் மாணவர்களுக்கும், படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதால் பெரும் பதற்ற நிலை உருவானது.

தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கடந்த 19 ஆம் திகதி அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் நேற்று இருவர் சுட்டுக்கொலை

வவுனியா —

வவுனியா - வைரவர் புளியங்குளத்தில் தனியார் பஸ் நிறுவன உரி மையாளர் ஒருவர் உட்பட இருவர் வெள்ளைவானில் வந்த இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட னர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் வைரவர் புளியங்குளத்திலுள்ள கபிலன் ரவல்ஸ் என்ற தனியார் பஸ் நிறுவன உரிமையாளரின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நிறுவன உரிமையாளரான எம். குணம் ரத்தினம் மற்றும் பஸ் சாரதி யான யூட் ஆகிய இருவருமே சுட்டுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையினரின் தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்!

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் வேண்டுகோள்

திருகோணமலை —

திருகோணமலை கடற்பிரதேசத்தில் பொது மக்களின் குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதலை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்டத்துக்கான புதிய தலைவர் ஊவே ஜான்சன் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

சம்பூரில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்ற இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கூறியதாவது -

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துக்கு உட்பட்ட கடற்பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் போக்குவரத்து மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கை பிரிப்பதற்கு புதிய கூட்டணி உருவாக்கம்!

கொழும்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் நோக்குடன்- தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைமையில் செயற்படும் குழுவொன்று அமைக்கப் பட்டுள்ளது.

கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டணி என்ற பெயரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தச் செயலணியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை சவ்சிறிபாயவில் நடைபெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)



# அஞ்சல் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம் —

ஒருங்கிணைந்த அஞ்சல்சேவையின் தொகுதி 'ஆ' தரம் 1 'ஆ' பிரிவு அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப்பரீட்சை - 2006. தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமையடிப்படையில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளே மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

இந்தப் பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்துக்குரித்தானது.

கல்விப்பொதுத் தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன், சிரேஷ்ட தராதரப்பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம் அத்துடன் எண்கணிதம், தூயகணிதம், அடிப்படைக்கணிதம், வணிக எண்கணிதம் அடங்கலாக 4பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தியடைந்திருக்கவேண்டும்.

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழி அல்லது சிங்களம், ஆங்கிலம், தமிழ் இலக்கியம் மற்றும் எண்கணிதம், தூயகணிதம், அடிப்படைகணிதம், வணிக எண்கணிதம், கணிதபாடம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். திறமைச்சித்தி நான்கும் ஒரே தடவையில் பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

தேசிய கல்விப்பொதுத் தராதரப் பரீட்சையில் முதல் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் ஏ அல்லது பீ தரத்தில் சித்தியெய்தி இருப்பதுடன், ஏனைய பாடங்களில் சி தரத்தில் சித்தியெய்தி இருப்பதுடன் - இரண்டு தடவைக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். இதில் ஐந்து பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 2006.04.12ம் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அஞ்சலகத்தில் 250ரூபா கட்டணம் செலுத்தி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை 2006.04.12 ஆம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர், ஒழுங்குபடுத்தும் வெளிநாட்டு பரீட்சை கிளை, இலங்கைப் பரீட்சை திணைக்களம், த.பெ.இல.1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கடந்த 10ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (21)

## கோட்டமட்ட போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டிகள் இன்றும் நாளையும் மத்தியகல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் குறித்த நேரத்தில் பாடசாலை மைதானத்திற்கு சமுகம் தருமாறு கோட்ட கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## 'மானுடம் வெல்லுமம்மா' இறுவட்டு நேற்று வெளியீடு






யாழ்ப்பாணம் —

சுனாமி அனர்த்தங்களிடையேயும் எழுகின்ற மானுடத்தின் ஆத்மராகங்களை வெளிப்படுத்தும் 'மானுடம் வெல்லுமம்மா' இசைத்தட்டு வெளியீட்டுவிழா நேற்று மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

சமூகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மானுடம் வெல்லுமம்மா இசைத்தட்டை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைக்க பிரபல பௌதிகவியல் ஆசிரியர் இ.குமரன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை தும்பளை இடைத்தங்கல் முகாம் தலைவர், வேலணை உதவி பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்தநிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர்.

பல்கலைக்கழக ஊடக வளங்கள் நிலைய இயக்குநர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் இசைத்தட்டை திறனாய்வு செய்தார்.

இந்த நிகழ்வில் வெளியீட்டு இசையை பாடகர்கள் ஜெயக்காந்தன், ஜீவநந்தினி, சண்முகலிங்கன், சியாமகிருஷ்ணா, ஜெகனி, கே.பி. குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த இசைத்தட்டை கு.அற்புதன் இசையமைத்ததுடன் ஜெ.ஜெயராஜ் தயாரித்துள்ளார்.

இதேவேளை இந்த நிகழ்வில் விசேடமாக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸின் சேவையைப் பாராட்டி சமூகவியல் துறை மாணவர் ஒன்றியத் தலைவர் திருக்குமரன், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மாலை அணிவித்துக்கௌரவித்ததுடன் பேராசிரியர் சண்முகலிங்கன் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தார். (த.நி)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - யாழ்ப்பாணம்

வழ/இல் : 389/05
தன்மை : காணி,
பெறுமதி : 4,50,000/-

வழக்காளி

திருமதி.செல்வமலர் சிவதாஸ்,
மயூரம்,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

- எதிர் -

01) துரை தங்கவேலாயுதம்,
02) கணபதி கந்தசாமி,

இருவரும்

பூமகள் சனசமூக நிலையம்,
அல்வாய் மேற்கு,
அல்வாய், நெல்லியடி.

- எதிராளிகள் -

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி 2ம், எதிராளிக்கு :

இந்த 2005ம், ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம், நாள் வழக்காளி மேற்படி எதிராளிக்கு எதிராக இவ் வழக்கை இம் மன்றில் தாக்கல் செய்து உரிய முறையில் எதிராளிகளுக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பித்திருந்தும் 2ம், எதிராளியான நீர் இற்றைவரை மன்றுக்கு சமூகம் கொடுக்காது தலைமறைவாகி வருவதினால் இப் பகிரங்க அறிவித்தலை உமக்கென பத்திரிகை ஊடாக பிரசுரிக்கின்றோம். இப் பிரசுரம் ஊடான பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளே உமக்கு இவ்வறிவித்தல் கிடைக்கப்பெற்றதாகவும் கருதப்படுகின்றது. இவ்விதம் அறிவித்தலை பெற்ற நீர் எதிர்வரும் 23/03/2006, அன்று இவ் வழக்கின் பொருட்டிலான தவணைக்கு தோன்றுமாறும் அத்தினத்திலேயே எதிர் நிறுவல் ஏதேனும் இருப்பின் அதனை சட்ட முறைப்படி மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுவதுடன், தவறின் இவ் வழக்கு விடயங்களை நீர் ஏற்றுக்கொண்டதாகக் கருதுவதுடன் உமது நடவடிக்கை தொடர்பில் வழக்காளியை ஒருமுக விளக்கம் மேற்கொள்ளப்பட்டு வழக்காளி தனது உரிமைக் கோரிக்கையை அவர் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இப் பகிரங்க அறிவித்தல் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு : சி.க.அமல்நிக்ஷன்,
சட்டத்தரணி,
மாவட்ட மேல்.மேன்முறையீட்டுமன்று,
கிளிநொச்சி

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பளை (யாழ்ப்பாணம்).

(2223)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் —

இலங்கையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியடைவதையும், யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைவதையும் முன்னிட்டு இன்று வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ்/மத்திய கல்லூரியில் முதலாவது சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதில் டொக்டர் ஜே.ஜீ. ஜயதிலக்க மற்றும் ஜேர்மன் Johanniter International Assistance நிறுவனத்தைச் சேர்ந்த Stephan Titge, Beate Mass ஆகியோர் கலந்து கொள்வார்கள்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
கோவை பிறதேர்ஸ்
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00



மனோகரா யாழ்ப்பாணம்
புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அஷிமா மற்றும் பலர் நடித்த
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின் நடித்த


மெர்குரிப்பூக்கள்
பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
தங்கர் பச்சான், நவ்யா நாயர் நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி
தினசரி நான்கு காட்சிகள்
கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

DAIDO Mopet

48CC
Koyo ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO


ஏகமுகவர்
செர்ன்டிப் மோட்டர் என்டர்பிரைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341550-1, 2435779,
பக்ஸ் 011-2454605
E.mail: zme@slt.lk

வடக்கில் உங்கள் தேவைகளை நிறைவுசெய்ய முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட
Annai Nagaa Food City
தனது 4ஆவது அகவையில் மே 31ம் திகதி வரை தினமும் ஒரு அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.
இன்றைய அதிர்ஷ்டசாலி
T.சிவரஞ்சினி,
22/5 மாரியம்மன் றோட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
இன்றே விரையுங்கள்.
[C/5167]


### 31 ஆம் நாள் நீங்கா நினைவுகளில்

செல்வி
முகுந்தன் சுதர்சியா



ஜனனம் :- 21.10.1998
மரணம் :- 21.02.2006

குலம் உதிக்க வந்த கொழுந்தே - நீ மறைந்து
மாதமொன்று போனதம்மா பாசக்கிளியே
என்ன பாவம் செய்தோமம்மா உனையிழக்க
எக்கணமும் உன் பிரிவால் கலங்குகிறோம் - இனி
என்றோ உனையிங்கு காண்பது நாம்
சுதர்சிக் குட்டி உன் நினைவால் துடித்து நிற்கும்
உறவுகள் எம் விழிநீரால் மாலை சாத்தி - உன்
அகலா நினைவலையில் அஞ்சலித்து ஏங்கி நிற்கும்

குடத்தனை கிழக்கு.

அன்பு அப்பா, அம்மா, தம்பி, மாமி, சித்தி, சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா

(சி/5168)

# மகிந்தவின் அரசை ஆதரிக்குமாறு சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள்



கொழும்பு —

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பான சந்திரிகாவின் அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். ஏனெனில் உள்ளூராட்சி சபைகள் மூலமாகக் கட்சியை வலுப்படுத்தி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் அமைதி முயற்சிகளை வரவேற்க வேண்டும்.

ஊழல் நிறைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி நிர்வாகங்கள் களையப்பட வேண்டும். 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் கொடூர ஆட்சிக்கு முடிவு கட்டி 1994 ஆம் ஆண்டு நான் புதிய நிர்வாகத்தை பல சவால்களுக்கு மத்தியில் அமைத்தேன். தொடர்ந்து 11 ஆண்டுகள் நிர்வாகத்தை நடத்தினேன்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்தி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கரத்தை வலுப்படுத்த வேண்டுகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியெற் பொப் மட்டக்களப்பில்!

கொழும்பு —

இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் எரிக் ஜவன் நியெற் பொப், ஜெனிவா பேச்சுவார்த்தையின் பின்னர் மட்டக்களப்பில் நிலவும்தற்போதைய சூழ்நிலை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு சென்றார்.

இந்த விஜயத்தின்போது மட்டக்களப்பில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய நியெற் பொப் - ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான அலுவலகத்துக்கும் விஜயம் செய்துள்ள அவர் - மட்டக்களப்பில் தற்போது நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளதாகத் தெரியவருகிறது.

# தாக்குதல் நடத்தியதை ஒப்புக்கொள்கிறது கடற்படை

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு மற்றும் பீரங்கித் தாக்குதல் நடத்தியதை கடற்படையினர் ஒப்புக்கொண்டனர்.

திருகோணமலை கடற்பரப்பில் வழமை போன்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் - விடுதலைப்புலிகள் தம் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து, பதிலுக்கு தாம் தாக்குதல் நடத்தியதாக கடற்படையினர் தரப்பில் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை - சம்பூர் கடற்பிரதேசத்தில் கடற்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை சந்தேகத்துக்குரிய இரு படகுகள் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் நுழைந்ததாகவும் - அப்போது படகிலிருந்த விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மூதூர் கிழக்குப் பிரதேச கடலோர கிராமங்கள் மீது கடந்த திங்கட்கிழமை முற்பகல் கடற்படையினர் தொடர்ச்சியான துப்பாக்கிச்சூடுகளை நடத்தியதில் ஒரு சிறுவன் படுகாயமடைந்தான்.

இந்த நிலையில், கடற்படை தாம் நடத்திய தாக்குதலை திசைதிருப்பும் வகையில் - புலிகள் தாக்குதல் நடத்தியதால்தான் பதில் தாக்குதல் நடத்தியதாகக் கூறியுள்ளது.

# பாடசாலை செல்லாத சிறுவர்கள் 2 லட்சத்துக்கும் மேல் உள்ளனர்

கொழும்பு —

இலங்கையில் பாடசாலை செல்லும் வயதுக்குட்பட்ட இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளைக் கைவிட்டு பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்கள ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கெதிரான தேசிய வழிநடத்தல் என்ற தலைப்பில் கொழும்பில இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

குறிப்பாக இந்தச் சிறுவர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கரும்பு பயிரிடுதல் மற்றும் நெற்செய்கை, போதைவஸ்துகளை கடத்துதல் போன்றவற்றில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதே அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமைக்கான காரணமாகும்.

பிள்ளைகளின் எதிர்காலத்தை எந்தத் திசையில் ஈடுபடுத்தவேண்டுமெனத் தீர்மானிப்பதற்கு பாடசாலைக் கல்வி அத்தியாவசியமான காரணி என்பதால், அவர்களுக்கு கல்வியை புகட்டாமலிருப்பது அவர்களது எதிர்காலத்தை முழுமையாக வேறு வழிக்குத் திருப்பும் ஒன்றாகும்.

இந்த நிலையை இல்லாமல் செய்வதற்காக அரசின் செயற்பாட்டைப் போன்று அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து விரைவான செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

## போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டது

கொழும்பு —

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த பாடசாலை அதிபர் தரம் 11 இற்கான பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தபால்மூல வாக்காளர்களுக்கு வேட்பாளர் விபரம் அனுப்பப்படவில்லை

கொழும்பு —

தபால்மூல வாக்காளிப்பை மேற்கொண்டவர்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை தேர்தல் திணைக்களம் அனுப்பாததால் வாக்களிப்பில் ஈடுபட்டவர்கள் பெரும் சிரமப்படவேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர் அட்டையுடன் வேட்பாளர் பட்டியலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்தல் திணைக்களத்தால் வழமையாகவே வாக்காளர்களுக்கு அனுப்பப்படுவதுண்டு.

எனினும் இதனைக் கட்டாயம் அனுப்ப வேண்டுமென்ற எந்தவித சட்டதிட்டங்களும் இல்லை.


இந்தப் பட்டியலை அனுப்பாததற்குக் காரணம் அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதமே என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நடைபெற்று முடிந்த தபால்மூல வாக்களிப்புக்கு 2 லட்சத்து 16 ஆயிரத்து 850 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 23 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுவதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அரசு தொடரவேண்டுமா என்பதை ஜே.வி.பியின் 30 பேரே தீர்மானிப்பர்

## விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு —

இந்த அரசாங்கத்தை வைத்திருப்பதா இல்லையா என்பதை தீர்மானிப்பது ஜே.வி.பியின் 30 பேர்தான். எனவே மக்களுக்கு நாட்டுக்கு பாதகமாக முடிவுகள் வந்தால், உடனடியாக மக்கள் எமக்குத் தந்த ஆணையைப் பாவிப்பதற்கு ஜே.வி.பி எந்த வேளையிலும் தயங்காதென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கேகாலையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது -

நாங்கள் இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்குப் பெரும் பாடுபட்டோம். நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக மிகவும் பெரிய அர்ப்பணிப்புக்களை ஜே.வி.பி செய்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# தேர்தலை ஒத்திவைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில் -

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது அநீதியானது. அனைத்து ஜனநாயக நடைமுறைகளுக்கும் எதிரானது.

தேர்தலை ஒத்திவைக்கும் முன்பாக அந்தப் பிரதேச பெரும்பான்மை இன மக்களுடன் கலந்தாலோசனை நடத்தி இருக்க வேண்டும். வடபகுதியில் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்தாலும் கிழக்கில் நிலைமை அப்படியில்லை.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் கிழக்கில் பெரும்பான்மையினராக உள்ளனர். ஆகையால் கிழக்கில் தேர்தலை ஒத்திவைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படிக் கோரிக்கை விடுக்க முடியும்?

தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளோம். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவையும் விரைவில் சந்திக்கவுள்ளோம்.

கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் இயங்காது போனால் போரினாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் மீளமைப்புப் பணிகள் முடங்கிவிடும். ஆகையால் இந்தப் பணிகளை முன்னெடுக்க உரிய அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# சொத்து விபரங்களை அறிய புதிய சட்டம் அவசியம்!

## ட்ரான்ஸ்பரன்ஸி நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு —

தற்போது அமுலிலுள்ள சொத்து விபரச் சட்டம் தொடர்பாக புதிய சட்டம் ஒன்றின் தேவை ஏற்பட்டுள்ளதாக ட்ரான்ஸ்பரன்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என அந்த நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி. வெலியமுன தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் சொத்து விபரங்களை வெளியிடுவதற்கான முறையில் புதிய சட்டம் இயற்றப்படவேண்டும்.

தற்போதுள்ள சட்டத்தின்படி குறிப்பிடப்பட்டவர்களின் சொத்து விபரங்கள் உரிய முறையில் வெளியிடப்படுவதில்லை.

புதிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அடிப்படை விடயங்கள் குறித்து லஞ்ச ஊழல் மோசடி குற்றத் தடுப்பு ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதாரணதர பாடத்திட்டம் அடுத்த வருடத்தில் மாற்றம்!

கொழும்பு —

அடுத்த வருடம் முதல் க.பொ.த சாதாரணதர பாடத்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி 2008 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் திருத்தப்பட்ட பாடத்தின் கீழ் நடைபெறுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திருத்தத்துக்கமைய சாதாரணதரப் பரீட்சையில் 5 கட்டாய பாடங்களாக இருப்பது 6 ஆக அதிகரிக்கப்படும். சமயம், சிங்களம் அல்லது தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலதிகமாக வரலாறு கட்டாய பாடமாக்கப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இந்த ஆறு கட்டாய பாடங்களுக்கு மேலதிகமாக மேலும் மூன்று பாடங்களுக்கு தோற்ற வேண்டுமெனவும், அதற்காக மூன்று தொகுதிகளின் கீழ் 19 பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் தரம் 11 இற்கு பிரவேசிக்கும் மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் செயற்படுத்தப்படவிருப்பதுடன், இதற்கு மேலதிகமாக தரம் 6 பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய பாடத்திட்ட மாற்றம் தொடர்பாக ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கு அறிவுறுத்தும் விசேட கலந்துரையாடல் கடந்த வாரம் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது.

(தே)

# மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் மண் கவ்வியது இலங்கை அணி!




கொழும்பு

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கொழும்பு - எஸ்.எஸ்.சி. அரங்கில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை 4 விக்கெட்டுக்களால் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது.

ஏற்கனவே இடம்பெற்ற 2 போட்டிகளில் ஒருபோட்டி மழையால் கைவிடப்பட்டதுடன், இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்று 1- 0 என தொடரில் முன்னிலை வகித்தது.

அத்தப்பத்து, வாஸ், ஜயசூரிய என முன்னணி வீரர்கள் பலர் இல்லாத நிலையில் நேற்றைய போட்டியில் வெற்றிபெற்று தொடரைச் சமப்படுத்தும் நோக்கில் இலங்கை அணி களமிறங்கியது.

போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட



வீரர்களாக தரங்க - கப்புகெதர ஜோடி களமிறங்கியது.

இருவரும் நிதானமாக நிலைத்து நின்று ஆடத்தொடங்கினார்கள். இந்த நிலையில் ஸ்கோர் 57 ஐ எட்டிய போது இலங்கை அணியின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. 43 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 23 ஓட்டங்களை எடுத்த தரங்க, அப்துல் ரசாக் வீசிய பந்தை கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களத்தில் நின்ற கப்புகெதரவுடன் - சங்ககார ஜோடி சேர்ந்தார். இருவரும் ஓரளவு சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கணிசமாக உயர்த்தினர்.

எனினும் ஸ்கோர் 93 ஆக இருந்தபோது கப்புகெதரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 74 பந்துகளை எதிர்கொண்டு 7 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தை (50) தொட்ட கப்புகெதர ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் ஜெயவர்த்தன களமிறங்கினார். எனினும் ஸ்கோர் 105 ஆக இருந்தபோது சங்ககாரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 27 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார, அப்ரிடியின் பந்தை கம்ரல் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயவத்தனவுடன்- லொக்கு ஆராய்ச்சி ஜோடி சேர்ந்தார். எனினும் ஸ்கோர் 131 ஐ எட்டும் வரைக்கும்தான் இவரால் தாக்குப் பிடிக்கமுடிந்தது. 18 பந்துகளை எதிர்கொண்டு 13 ஓட்டங்களைப்பெற்ற லொக்கு ஆராய்ச்சி - அப்ரிடியின்





பந்தை மொகமட் யூசுப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஆர்னோல்ட் வந்த வேகத்திலேயே ஓட்டமெதையும் பெறாமல் பவிலியன் திரும்பினார்.

ஸ்கோர் 133 ஐ எட்டுவதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்த இலங்கை அணி ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஏற்கனவே களத்தில் நின்ற ஜெயவர்த்தனவுடன், டில்சான் ஜோடி சேர்ந்தார். இவர்களின் இணைப்பாட்டம் ஸ்கோர் 157 ஐத் தொட்டபோது முடிவுக்கு வந்தது.

56 பந்துகளில் 1 பவுண்டரியுடன்



31 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயவர்த்தன ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

G.M.K. COMMUNICATION
IDD Call
Local Call
Net 2 Phone
E-Mail
Photo Copy
Computer Typing
Computer Printing
Scanning
CD Writing
Computer Repairing
302, Temple Rd, Nallur, Jaffna. TP:021-2223760, Fax:021-4591194

அடுத்து மஃரூப் களமிறங்கினார். சகலதுறை ஆட்டக்காரரான இவரால் வெறும் 19 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

மொகமட் ஆசிப் வீசிய பந்தை இம்ரான் பர்கத்திடம் பிடிகொடுத்து மஃரூப் ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 193 ஐத் தொட்டிருந்தது.

இந்த நிலையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டில்சான் 44 ஓட்டங்களுடன் சொஹைப் மலிக் கால் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பின்வரிசை வீரர்களான முரளிதரன் 2, தம்மிக்க பிரசாத் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அப்ரிடி 3, நவீட் உல் ஹசன் 2, மொகமட் ஆசிப், சொஹைப் மலிக் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

225 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சொஹைப் மலிக் - இம்ரான் பர்கத் ஆட்டத்தைத் தொடங்கினர்.

ஸ்கோர் 61 ஐ எட்டும்வரை இவர்களின் இணைப்பாட்டம் தொடர்ந்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முதலாவது விக்கெட்டாக சகலதுறை ஆட்டக்காரரான சொஹைப் மலிக் வீழ்த்தப்பட்டார்.

38 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களை எடுத்த சொஹைப் மலிக் - முரளிதரனின் பந்தை கப்புகெதரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து இம்ரான் பர்கத்துடன்



யுனிஸ்கான் ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருக்கையில் இம்ரான் பர்கத் ஆட்டமிழந்தார்.

52 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்சானின் பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து இம்ரான் பர்கத் ஆட்டமிழந்தார். இதன்போது ஸ்கோர் 117 ஐ எட்டியிருந்தது.

இந்த நிலையில் மொகமட் யூசுப் களமிறங்கினார். ஸ்கோர் 137 ஆக இருந்தபோது யுனிஸ்கான் ஆட்டமிழந்தார்.

46 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்திருந்த யுனிஸ்கான் முரளிதரனின் பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து இன்சமாம் களமிறங்கினார். எனினும் ஸ்கோர் 177 ஐ எட்டுவதற்குள் இவரின் விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. 22 பந்துகளில் 12 ஓட்டங்



களைப் பெற்றிருந்த இன்சமாம் முரளிதரனின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் மொகமட் யூசுப்புடன், அப்துல் ரசாக் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மொகமட் யூசுப் - மஃரூப்பின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அப்போது ஸ்கோர் 207 ஆக இருந்தது. 73 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 53 மொகமட் யூசுப் பெற்றிருந்தார்.

அடுத்து அப்ரிடி களமிறங்கினார் எனினும் இவரால் ஒரு ஓட்டத்தை மாத்திரமே பெறமுடிந்தது.

ஸ்கோர் 210 ஆக இருந்தபோது கம்ரன் அக்மல் களமிறங்கினார். ஏற்கனவே களத்திலிருந்த அப்துல் ரசாக்கும், கம்ரல் அக்மலும் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர்.


33 பந்துகளில் 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த அப்துல் ரசாக்கும், 7 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த கம்ரல் அக்மலும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்த நிலையில் 45.2 ஆவது ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களால் இலங்கை அணியைத் தோற்கடித்து கிண்ணத்தைச் சுவீகரித்தது.

பந்துவீச்சில் முரளிதரன் 3, மஃரூப், லொக்கு ஆராய்ச்சி, டில்சான் தலா 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர் நாயகன் விருதை அப்துல் ரசாக் பெற்றுக்கொண்டார்.

# மும்பை டெஸ்ட் போட்டியில் இந்தியா அதிர்ச்சித் தோல்வி



மும்பை

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே மும்பையில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 212 ஓட்டங்களால் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஜாபர் 4, கும்ளே 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கதிருந்தனர். இருவரும் நேற்று ஆட்டத்தைத் தொடந்தனர்.

ஸ்கோர் ஸ்கோர் 21 ஐ எட்டிய போது கும்ளே ஆட்டமிழந்தனார். 11 பந்துகளில் 6 ஓட்டங்களை எடுத்திருந்த கும்ளே - ஹோகாட்டின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜாபருடன், ராவிட் ஜோடி சேர்ந்தார். எனினும் ஸ்கோர் 33 ஐ எட்டுவதற்குள் இந்த ஜோடியும் பிரிய நேரிட்டது. 57 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்திருந்த ஜாபர், பிளின்ரொப்பின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து ராவிட்டுடன், டெண்டுல்கர் ஜோடி சேர்ந்தார். கடந்த டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாகச் சோபிக்காது பலத்த விமர்சனங்களை எதிர்கொண்ட டெண்டுல்கர் இந்தப் போட்டியில் அடித்தாட முற்பட்டார்.

ராவிட் - டெண்டுல்கர் ஜோடி ஸ்கோர் 75 ஐ எட்டுவதற்குள் பிரிந்தது. 60 பந்துகளை வீணடித்து 9



ஓட்டங்களை மாத்திரமே பெற்ற ராவிட், பிளின்ரொப்பின் பந்தை ஜோன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து ஷேவாக் களமிறங்கினார்.

சற்று நேரத்தில் டெண்டுல்கரும் ஆட்டமிழந்தார். 57 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த டெண்டுல்கர், உடலின் பந்தை பெல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஷேவாக்கும் ஆட்டமிழந்தார். 16 பந்துகளை எதிர்கொண்டபோதும் ஓட்டமெதையும் பெறாது அன்டர்சனின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஷேவாக் ஆட்டமிழந்தார்.



இந்தத் தொடரைச் சமநிலையில் நிறைவுசெய்து கிண்ணத்தைக் கைப்பற்றலாம் என எண்ணியிருந்த இந்திய, அணிக்கு 77 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் யுவராஜ் - டோனி ஜோடி களத்திலிருந்தது.

எனினும் பின்வரிசை ஆட்டக்காரர்களில் டோனி 5, ஹர்பஜன் சிங் 6, பட்டேல் 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சிறிசாந் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காதிருந்தார்.

இதனையடுத்து இந்திய அணி 104.1 ஆவது ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் உடல் 4, பிளின்ரொப் 3, அன்டர்சன் 2, ஹோகாட் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் 1-1 என்ற அடிப்படையில் இந்திய - இங்கிலாந்து அணிகள் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டன.

தொடர் நாயகன் விருதை பிளின்ரொப் தட்டிச்சென்றார்.

## விளையாட்டு

# முதல் மூன்று போட்டிகளில் சச்சின் விளையாடமாட்டார்!



மும்பை

இங்கிலாந்துக்கு எதிரான முதல 3 ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காயம் காரணமாக டெண்டுல்கர் இடம்பெறவில்லை.

டெஸ்ட் தொடர் முடிந்து இந்தியா இங்கிலாந்து அணிகளிடையே 7 ஒரு நாள் போட்டிகள்கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இதில் முதல் 3 ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் இடம்பெறவில்லை. தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் லண்டன் சென்று டொக்டர் அன்ட்ரூ வலசிடம் சிகிச்சை பெறவுள்ளார். எனவே அவர் 8 வாரங்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

முதல் 3 போட்டிகளுக்கான இந்திய அணி வீரர்கள் விபரம் வருமாறு -

ராவிட் (கப்டன்),ஷேவாக், கம்பீர், யுவராஜ் சிங், கைவ், சுரேஷ் ரெய்னா, டோனி, பதான், ஆர்.பி.சிங், ஸ்ரீசாந்த், முனாப்பட்டேல், அகர்கர், ஹர்பஜன் சிங், வேணுகோபால் ராவ் மற்றும் ரமேஷ் பவார்.



யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையம் முழு நேர ஊடகவியல் டிப்ளோமா பயிற்சி ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றபோது அருட்திரு நீக்கிலஸ் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், முன்னாள் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், டெனிஸ் அபிவிருத்தி குழுமத்தைச் சேர்ந்த ஊடகவியல் ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறுநெற், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். *படங்கள் - அருள்*

# எமது பிரதேச நூலகங்கள் வளர முடியாமைக்கு நிதிப்பற்றாக்குறையே பிரதான காரணமாகும்!

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம் —

நாம் எமது பிரதேச நிலையை - வட பகுதி நிலையை தென்பகுதியுடன் ஒப்பிட்டால், தெற்கிலே நூலகங்கள் சர்வதேச தரத்துக்கு வளர்ந்துள்ளன. வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. வடபகுதியைப் பொறுத்தவரை நூலகங்களது விருத்திக்கான முயற்சிகளும், செயற்பாடுகளும் அதிகமான அளவில் இருந்தும், அந்த நிலைமைக்கு எம்மால் உயர முடியாமல் உள்ளது.

இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக இருப்பது நிதி வளப் பற்றாக்குறையே என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நூலக விழிப்புணர்வு நிறுவக ஏற்பாட்டில் ஸ்ரீ அருளானந்தம் எழுதிய 'நூலகப் பகுப்பாக்கம் நூலகர் கைந்நூல்' வெளியீட்டு விழாவும், தேசிய வாசிப்பு மாதப் பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு வைபவமும் - கடந்த வாரம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது - கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது யாழ்ப்பாண மண் கல்விக்கு சிறப்புப் பெற்ற மண். இந்த மண்ணில் வாழ்ந்த எமது பெரியோர்கள் ஒவ்வொருவரது வீடுகளிலும் ஒவ்வொரு நூலகம் இருந்தது. அங்கு தமிழ், சமயம், ஆங்கிலம் என்ற வகைகளில் பல்வேறு நூல்கள் இருந்தன. அவர்கள் அந்த நூல்களைத் தெய்வத்தைப் போல போற்றினர். சரியான வகையில் அவற்றைப் பராமரித்து வந்தனர். இன்று அந்த நிலை இல்லாது போய்விட்டது.

நூல்களை வாசிப்பதில் ஆர்வம் குறைந்து வருகிறது. அன்று நூலகங்கள் பிடித்திருந்த இடத்தை இன்று தொலைக்காட்சிகள் பிடித்து விட்டன. அதனால் அன்று வீடுகளில் பராமரிக்கப்பட்டு வந்த நூல்கள் எல்லாம் நூலகங்களை நோக்கி வரத் தொடங்கி விட்டன. அவை நூலகங்களை நோக்கி வரும் போது அங்கிருக்கும் நூலகர்களுக்கு அவை சிரமங்களைத் தந்து விடுகின்றன.

இந்த நிலையில் இந்த நூலக விழிப்புணர்வு நிறுவகம் முதல் கட்டமாக எமது பிரதேசத்திலுள்ள ஐம்பத்தியொரு நூலகங்களினது நூலகர்களுக்குபயிற்சி வழங்கி அவர்களூடாக இந்த நூலகங்களை சிறப்பாக இயக்க முயற்சி எடுத்து வருகிறது.

இவர்கள் எடுக்கும் முயற்சிகள் ஒவ்வொன்றும் சரியான இடத்துக்குப் போய்ச் சேர ஒவ்வொருவருமே முயல வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்படும்போது எமது கலாசாரம், சமயம், மொழி என்பன நிச்சயமாக மேன்மையுறும் என்று மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களுள் ஒருவராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.வேதநாயகம் உரையாற்றும்போது -

மனிதன் தொடர்ந்தும் வாழ்வதற்காக கற்க வேண்டும். இன்று ஒவ்வொருவருமே தனக்குத்தானே ஆசிரியராக இருக்க வேண்டிய தேவை உள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்ய நூலகம் மிக மிக அவசியமானதாகும். அத்தகைய நூலகம் உயிரோட்டமுள்ள ஒன்றாக இருக்க வேண்டியதும் இன்றியமையாதது. அதற்கு நூலக ஒழுங்கமைப்பு என்பது அடிப்படையானதாகி விடுகிறது.

இன்றைய கல்விக் கொள்கையில் பாடசாலை நூலகம் என்பது மிக முக்கிய அலகாக மாறிவிட்டது. இதனால் பாடசாலை நூலகங்களை ஒழுங்கமைப்பு செய்ய வேண்டிய அவசியம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை நூலகங்களது ஒழுங்கமைப்புக்கு இங்கே வெளியிடப்பட்டிருக்கும் 'நூலகப் பகுப்பாக்கம் நூலகர் கைந்நூல்' என்ற இந்தப் புத்தகம் பெரிதும் உதவியாக இருக்கும் என்று கூறினார்.

யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்த நூல் வெளியீட்டு விழாவில் - யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன், இலங்கை நூலகச் சங்க வட பிராந்திய இணைப்பாளர் கல்பனா சந்திரசேகர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் வெளியீட்டுரையை உதவிக்கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசனும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக பதில் நூலகர் திருமதி இ.கருணானந்தராசா ஆகியோரும் வழங்கினர். (31)

## இலவச தையல் பயிற்சி

யாழ்ப்பாணம் —

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சன சமூக நிலையத்தினர் நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு சுயதொழில் மேம்பாட்டுக்காக தையல் பயிற்சியை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கான நிதியுதவியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஒதுக்கியிருந்தார்.

இந்தப் பயிற்சிநெறியில் பங்கு கொள்ள விரும்பும் பெண்கள் தமது விண்ணப்பங்களை நிலைய செயலாளர் வ.அன்பழகனிடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (31)

## கற்கடதீவு அந்தோனியார் ஆலய தவக்கால யாத்திரைத் திருநாள்

நெடுந்தீவு —

கற்கட தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த தவக்கால யாத்திரைத் திருநாள் நாளை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும், பவனியும் இடம்பெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் திருநாள் திருப்பலியும், தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

இந்த திருநாளையொட்டி நெடுந்தீவில் இருந்து சனிக்கிழமை பகல் 12 மணி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி ஆகிய நேரங்களில் படகு சேவைகள் இடம்பெறும்.

இதேவேளை, இந்தத் திருநாளுக்கென வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் மூலம் செல்லும் பக்தர்கள் நெடுந்தீவில் உள்ள தங்களது இடங்களில் இருந்து புறப்பட்டுச் செல்லவும் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் பக்தர்கள் தங்களது தேவைக்கேற்ப குடிநீர், உணவு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருநாள் திருப்பலியை நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு க.அருள்நேசன் அடிகளார் ஒப்புக்கொடுப்பார்.

திருநாளை நெடுந்தீவு புனித அந்தோனியார் பற்றிமா மாதா ஆலய பங்கு மக்களும், கற்கடதீவு தொழிலாளர்களும் சிறப்புற நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். (113)

## கால்நடைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

தென்மராட்சி —

மிருசுவில் வடக்குப் பிரதேச வயல் நிலப்பரப்புகளில் விதைக்கப்பட்டுள்ள சிறுதானியங்களான கௌபி, உழுந்து, பயறு போன்றவற்றை அயல் கிராம கால்நடைகள் நாசப்படுத்தி வருவதால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கால்நடைகளின் உரிமையாளர்கள் தமது கால்நடைகளைக் கட்டுப்படுத்தி உதவுமாறு மிருசுவில் வடக்கு விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

## குருநகர் இறங்குதுறையை புனரமைக்க கடற்படையினர் அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம் —

குருநகர் இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான அனுமதி கடற்படையினரால் மறுக்கப்பட்டுவருவதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

குருநகர் இறங்குதுறையைப் புன[illegible]பதற்கு பல தொண்டு நிறுவனங்கள் முன்வந்தபோதும் - கடற்படையினர் அதற்கான அனுமதியை மறுப்பதால் புனரமைப்புச் செய்ய முடியாத நிலை எற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடற்தொழிலாளர்கள் அதிகளவு இருக்கின்ற இடமாக குருநகர் பகுதி உள்ளது. இந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்கள் இந்த இறங்குதுறையின் ஊடாகவே தொழில் செய்து வருகின்றமை வழக்கம்.

நீண்ட காலமாக கடற்படையினர் இறங்குதுறை அமைப்புப் பகுதியை உயர் பாதுகாப்பு வலயப்பிரதேசமாக வைத்திருப்பதால், பழுதடைந்த நிலையில் இருக்கின்ற இறங்குதுறையை புனரமைப்புச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இறங்குதுறை புனரமைப்பு செய்வதற்கு நாம் பல தொண்டு நிறுவனங்களிடம் உதவி கோரியபோதும் - அந்த நிறுவனங்கள் புனரமைத்து தருவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதும் கடற்படையினரிடம் அனுமதி கேட்டபோது - உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்திருப்பதாக காரணம் காட்டி அனுமதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகிறது.

இறங்குதுறை புனரமைப்பு செய்யப்படாததால் அதனூடாக தொழில் செய்வதில் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதோடு கடற்தொழிலாளர்கள் கடும் விசனம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார், (வ)

## நெடுந்தீவுக்கு அம்புலன்ஸ் படகு

நெடுந்தீவு —

நெடுந்தீவு அவசர நோயாளர் நலன் கருதி அம்புலன்ஸ் படகுச் சேவை ஒன்றை நடத்த கியூமெடிக்கா நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருவதாகவும், இந்த அனுமதி கிடைத்ததும் அவசர நோயாளர் அம்புலன்ஸ் படகுச்சேவை நெடுந்தீவு, குறிகாட்டுவான் என்பவற்றுக்கிடையில் நடைபெறும் என கியூமெடிக்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் வண. சாம் ராஜசூரியர் தெரிவித்தார். (110)

## பொது மண்டபம் அமைக்கும் பணி ஸ்தம்பிதமடையும் நிலையில்!


சுதுமலை —

ஊர்காவற்துறை - நாரந்தனை வடக்கில் வடக்கு - கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுவரும் பொது மண்டப கட்டட வேலைகள் தடைப்படும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பி[illegible]. பொது மண்டபம் அமைக்கும் வேலைக்குரிய நிதி உரிய நேரத்தில் வழங்கப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்டபம் அமைக்கும் வேலையில் ஈடுபடும் அமைப்பு - சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த நிலையைத் தெரியப்படுத்தியும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (44)

## தவக்கால நற்சிந்தனை




யேசு வாழ்ந்த காலத்திலும் சரி, இன்று நாம் வாழும் காலத்திலும் சரி மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. திக்கற்றோர் கூவி அழைக்கையில் அவர் தம் தேற்றரவாளராகத் தேடிவரும் தெய்வம்தான் நம் இறைவன். மனுவுருவெடுத்து மண்ணகம் வந்தபோது அவரது புரட்சிப் போதனைகளும், புதுமைச் சாதனைகளும் - வறியோருக்கும், வலுவிழந்தோருக்கும் வாட்டம் போக்கி வாழ்வு வழங்கின. சமுதாய சமத்துவத்தை வலியுறுத்தினார்.

கூன், குருடு போன்ற புற உடல் ஊனம் உள்ளோரைக் காட்டிலும், காது கேளாதோருக்கு சற்று தாழ்வு மனப்பான்மை அதிகம். பிறரது ஏளனத்தைத் தவிர்க்கவேண்டி சமூக உறவுகளிலும்கூட பங்குகொள்ளத் தயங்குவர். இதனால் மனித உணர்வுகளையும், உள்ளங்களையும் ஊடுருவிப் பார்க்கும் யேசுவின் மென்மையான இதயம் காது கேளாதவனை அழைத்து குணமாக்கினார்.

இதன்மூலம் ஒவ்வொரு மனிதனும் இறைவனின் பார்வையில் விலைமதிப்பற்றவன். பாகுபாடு என்பது இறைவனிடமில்லை. எனவே ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமளிக்கும் இதயங்களில் யேசு இல்லை. அத்தகையோர் கூடுமிடம் கோயிலுமாகாது - திருச்சபையுமாகாது. ஆகவே நாமும் சகோதரத்துவ சமத்துவத்தோடு வாழ முயலுவோம்.

*மோ.தார்சீசியஸ்.*



# எந்தத் தொழிலிலும் நம்பிக்கையுடன் செயற்பட்டால் உயர்வு பெறமுடியும்

***அலுவலக வீட்டுத்தளபாடங்களின் சாம்ராச்சியமாக யாழ்ப்பாணம் மனோகரா சந்தியில் மங்களா காட்சியறையாகவும், கஸ்தூரியார் வீதியில் மங்களா தளபாட விற்பனை நிலையமாகவும் இயங்கி வரும் விற்பனை நிலைய உரிமையாளரான குமாரசாமி ஜெயந்தன் என்பவருடனான நேர்காணல்...***

சிறுவயதினிலே எனது தந்தையை இழந்து, இழப்பின் கனத்தை அறிந்ததால் வாழ்வின் சுமையை இலகுபடுத்தத் தொடங்கினேன். அன்றிலிருந்து பாடசாலை செல்லும் மிகுதி நேரங்களில் வீட்டிலேயே சிறுகைத் தொழில் ஒன்றை மேற்கொண்டேன். அதாவது - கோழிப் பண்ணையை உருவாக்கினேன். பின்பு தையல் வேலை பழகி சிவலிங்கப் புளியடியில் தையல் கடை ஒன்றை நடத்தி வந்தேன். பின்பு சிவன்கோயிலடியில் நடத்தினேன்.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது சாவகச்சேரியில் சாப்பாட்டுக் கடை, தையல் கடை மூலம் உழைத்து வந்தேன். பின்பு இடம்பெயர்ந்து வன்னி சென்று, மறுபடியும் யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தில் "குமார்" என்னும் பெயரில் சாப்பாட்டுக் கடையைத் திறந்தேன். இப்படியாக விடாமுயற்சியாக



உழைத்தாலும், வெளிநாட்டு உதவியும் சேர்ந்து இவ்வளவு பெரிய கடை ஒன்றைத் திறப்பதற்கு முன்வந்தேன்.

கொழும்பில் இருந்து சகல பொருட்களையும் கொள்வனவு செய்து விற்பனை செய்கிறேன். அதாவது - வீட்டு, அலுவலக மரத்தளபாடங்கள், மெத்தை வகைகள், பிளாஸ்டிக் தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள், மூங்கில் தளபாடங்கள், கேட்டின் வகைகள், வீட்டுக்குரிய மின்பாவனைப் பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் பெறும் இடவசதியாகவும் அமையும் வண்ணம் நிறுவியுள்ளேன்.

மரத்தளபாடங்களை மட்டும் இங்கே உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகிறேன். ஏனெனில், கொழும்பில் இருந்து பொருட்களைப் பெற்று விற்பனை செய்வதால் கூடிய இலாபத்தைப் பெற முடியாதுள்ளதும், நாங்களே உற்பத்தி செய்து விற்பனை செய்துவருவதால் தரமான பொருளாகவும் இருக்கிறது.

கொழும்பில் இருந்து வருகின்ற பொருளின் விலையும் குறைவு, அதேவேளை வலிமையும் குறைவு. இங்கு செய்யப்படும் பொருளுக்கு வலிமையும், செலவும்கூட. நீண்ட நாள் பாவனையில் ஈடுபடுத்தவும் முடிகிறது.



தொழில் மேம்பாட்டுக்கு வங்கிகள் கொழும்பில் செய்கின்ற கடன் உதவிகளைவிட இங்கே மிகக் குறைவாகச் செய்கின்றன. ஆகவே பணத்தைப் பெறுவது மிகக் கடினமாகவுள்ளது.

பெறுமதி கூடிய பொருட்களையும் - பெறுமதி குறைந்த பொருட்களையும் நுகர்வோரின் தேவைக்கேற்ப விற்பனை செய்து வருகின்றோம். ஆடி மாதத்தில் கூடுதலாக வெளிநாட்டவர்கள் வருவதால், கூடுதலாக விற்பனை நடைபெறுகிறது.

யாழ்ப்பாண மக்களிடம் வெளிநாட்டுப் பணம் கூடுதலாகப் புழக்கத்தில் உள்ளதால் அவர்களுக்காக மட்டுமே கடையைத் திறக்கவில்லை. யாழ்.மண்ணிலே வெளிநாட்டு உதவியின்றி இருக்கின்ற வாடிக்கையாளர்களுக்கும் சேர்த்துத்தான் கடையைத் திறந்துள்ளேன். அதாவது - கூடிய விலையிலும், குறைந்த விலையிலும் பொருட்களைப் பெறக் கூடிய வசதி இங்குள்ளது. நாட்டில் பிரச்சினை இல்லையென்றால், எல்லாப் பொருட்களையும் இங்கேயே உற்பத்தி செய்து, விற்பனை செய்யக்கூடியளவில் பெரிய நிறுவனம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளேன் என்று நம்பிக்கையுடன் கூறினார்.

விடாமுயற்சியும், தொடர்ந்து தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இயங்கியதால் இன்று பெரியளவில் வளர்ந்திருக்கின்றதைப் பார்க்கின்றபோது எந்தத் தொழிலும் நம்பிக்கையுடன் தொடர்ந்து சளைக்காமல் ஈடுபட்டால் உயர்வு பெறமுடியும் என்பதை நிரூபித்திருக்கின்றார் இவர்.

**- செல்வா.**

# நன்னீர் மீன் வளர்ப்பு...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

நீர்த் தேக்க சிறு குடாக்களின் முக்கிய தொழிற்பாடு செய்கை முறை உணவூட்டலின் மூலம் மீன் குஞ்சுகளை விரைவாக வளர்ப்பதாகும். பின்பு இவை பொருத்தமான காலநிலைகளில் நீர்த்தேக்கத்தினுள் விடப்படும். மீன் குஞ்சுகள் விரைவாக வளர்வதால் நீர்த்தேக்கத்திலுள்ள இயற்கை இடையூறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு ஆரோக்கியமான மீன் குஞ்சுகள் உண்டாதல் உறுதிப்படுத்தப்படுகிறது.

**மீன் பிடித்தல்**

கட்டடம் அமைக்கப்படும் போதும், மீன் பிடிக்கப்படும் போதும் கவனம் எடுக்கப்படவேண்டும். மீன்பிடிக்கும் இடங்களைத் தேர்ந்தெடுத்த பின் அந்த இடத்திலுள்ள வீடுகள், அடி மரங்கள் மற்றைய தடைகள் போன்றவை முற்றாக அகற்றப்படவேண்டும். இதனால் மீன்பிடித்தல் வசதியாகவும், இலகுவாகவும் இருக்கும்.



இவ்வாறாக அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத்தில் வருடம் முழுவதும்மீன்பிடிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. வழிகாட்டி வலைகள் மூலம் மீன்களைத் துரத்திவிட்டு விசேடமாக அமைக்கப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி 3 அல்லது 4 மாதங்களுக்கு ஒருமுறை மீன்களைப் பிடிக்கலாம். பொதுவாக எல்லா மீன்களும் வலை மடியினுள் அகப்படும். உண்ணக் கூடிய அளவுக்கு வளர்த்த மீன்கள் பிடிக்கப்பட்டு, சிறிய மீன்கள் மேலும் வளர்ப்பதற்காக விடப்படும். இந்த முறை மூலம் ஒரு ஹெக்ரேயர் நீர் நிலையிலிருந்து பெறப்படும் மீன் உற்பத்தி மூன்று, நான்கு மடங்காக அதிகரிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தற்போதைய தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

**மூலதனச் செலவு**

இலங்கை இந்து சமூத்திரத்தால் சூழப்பட்டுள்ளதால் இத்தகைய துறையில் முதலிடுவது சிக்கனமானதா என்பது கேள்விக்குரிய விடயமாகும். எனினும் பின்வரும் காரணங்களால் இது நியாயமானதாகக் காணப்படுகிறது.

1 ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு நன்கு முன்னேற்றம் அடைந்த நுட்பமான தொழில் நுட்பங்களை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் அதிகளவு மூலதனச் செலவையும் கொண்டுள்ளது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் இந்தச் செலவை ஈடு செய்யமுடியாது. 1982 ஆம் ஆண்டு ஆழ்கடலில் இருந்து 2 ஆயிரத்து 200 தொன் மீன்களே பிடிக்கப்பட்டன. இது வருடமொன்றுக்குப் பிடிக்கப்பட்ட மொத்த மீனின் அளவில் 1.04 சதவீதமாகும். மறுபுறம் பார்க்கும் போது 1982 ஆம் ஆண்டு நன்னீரில் இருந்து 33 ஆயிரத்து 400 தொன் மீன் பிடிக்கப்பட்டது.

2. ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கு உயோகிக்கப்படும் பெரிய வலைகளின் பரிபாலனச் செலவும், நடைமுறைச் செலவும் அதிகமாகும். அத்துடன் வெளிநாட்டு வலைகளை எமது நீர் நிலைகளில் பாவிப்பதற்குத் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஒரு நீர்த்தேக்கத்தை அமைப்பதற்கு ஆகும் மொத்தச் செலவுடன் ஒப்பிடும்போது மீன்பிடித் தேவைகளுக்காக நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கான மேலதிகச் செலவு மிகவும் குறைவானதாகும். ஒருமுறை நிர்மாணிக்கப்பட்டால், நீர்த்தேக்கமுள்ள காலம் முழுவதுக்கும் இதை மீன் பிடித்தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும் என்பதிலிருந்து இதில் முதலீடு செய்த தொகையின் பயன் தெளிவாகத் தெரிகிறது. நடுத்தர அளவுள்ள நீர்த்தேக்கத்திலிருந்து பிடிக்கப்படும் மீனின் அளவானது - பெரிய வலையால் பிடிக்கப்படும் மீனின் அளவுக்குக் குறைந்ததல்ல.

3. நீர்த்தேக்க சிறு குடாக்களுள் மீன் வளர்த்தலும், நீர்த்தேக்கத்துள் மீன் பிடித்தலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன், நீரின் தூய்மையையும் உறுதிப்படுத்துகின்றன.

4. கிராமிய மக்களுக்கு அதிகளவு தேவையான புரதத்தை வழங்குகிறது.

5. கடலில் மீன் பிடிப்பது போலன்றி, நன்னீரில் மீன் பிடிக்கும் போது மீன்பிடித்தல் உறுதிப்படுத்தப்படுவதுடன் அபாயமும் மிகக்குறைவு.

இந்தத் துறையின் முடிவான வெற்றியை அடைவதற்கு நீர்த்தேக்க மீன்பிடித்துறையின் வெவ்வேறு பகுதிகளில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு அமைச்சுக்கள் நிலைமையை நன்கு விளங்கி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இது உள்நாட்டு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதுடன் மட்டுமன்றி, இந்த நாட்டுக் கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றதையும் ஏற்படுத்துமென்பதில் ஐயமில்லை.

# மூளை வளர்ச்சிக்குகந்த வல்லாரையைப் பயிரிட்டுப் பயன்பெறுவோம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**(அ) வல்லாரை பச்சடி:**

வல்லாரை - 01 பிடி

பச்சை மிளகாய் - 03

சின்னவெங்காயம் - 05

ஆகியவற்றை தூளாக அரிந்து உப்பு நீர், தேங்காய்ப்பால், எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துப் பிசைந்து உணவுடன் உட்கொள்ளலாம்.

**(ஆ) வல்லாரைச் சூரணம்:**

வல்லாரை இலையை காம்பு நரம்பு நீக்கி, நிழலில் உலர்த்தி, இடித்து சூரணம் 1 பங்கு, சீனி 2 பங்கு கலந்து, தேனும் சேர்த்து காலையும் மாலையும் சாப்பிடலாம். இது ஞாபக சக்தியை அதிகரிக்கச் சிறந்த உணவாகும்.

**(இ) வல்லாரைத் துவையல்:**

நெய் அல்லது மரக்கறி எண்ணெயில் வெதுப்பிய இலையுடன் இஞ்சி, பூண்டு, உப்பு, எலுமிச்சம் பழச்சாறு என்பன தேவையான அளவில் சேர்த்து, துவைத்து உணவுடன் சேர்த்துப் பரிமாறலாம்.

**(ஈ) வல்லாரைக் கோப்பி:**

உலர்த்தி இடித்த வல்லாரை இலைத்தூள், மிளகு, சுக்கு ஆகியவற்றைத் தேவையான அளவில் எடுத்து இதற்குச் சமனான நிறையில் கொத்தமல்லியும் இட்டு, நன்கு அரைத்துத் தூளாக்கி சுடுநீர் கலந்து, சாதாரண கோப்பி, தேநீர் போன்று பருகலாம்.

**(உ) வல்லாரை சர்பத்:**

வல்லாரையை நீர் சேர்த்து அரைத்தால் 1/2 லீற்றர் சாற்றுக் கரைசல் பெறப்படும். இதற்கு 1 லீற்றர் நீரும் அத்துடன், 750 கிராம் சீனியும் சேர்க்கப்பட்டு, தண்ணீர் சுண்டும் வரை அடுப்பில் கொதிக்க வைக்கப்படும். பின்னர் முறையே 25 கிராம் மிளகு, வசம்பு, ஏலக்காய் என்பவற்றைப் பொடி செய்து கொதிக்கும் கரைசலினுள் இட்டு ஒருமுறை கரைசல் பொங்கவிட்டு இறக்கி, பருத்தித் துணியால் வடித்து, ஆறவிட்டுப் போத்தல்களில் அடைக்கலாம். பின்னர் இதனைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவையானபோது நீர் சேர்த்து ஐதாக்கி ஐஸ்கிறீம், கச கசா போன்றன சேர்த்துப் பருகலாம். இங்கு வல்லாரைச் சாற்றின் செறிவு அதிகரிக்கும் போது போதை ஏற்படும். எனவே இதனைப் பருகும் போது கரைசலின் செறிவை ஐதாகப் பேணுதல் இன்றியமையாதது.

**(ஊ) இலைக் கஞ்சி:**

சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி தயாரிக்கும் போது வல்லாரையையும் சேர்த்துக் கஞ்சி



செய்வதால் சிறாரின் மூளையில் கிரகிப்புத் தன்மை அதிகரித்துக் கல்வி பயில பேருதவியாக அமையும்.

**(எ) வல்லாரைத் தைலம்:**

வல்லாரையை இடித்து எடுத்துப் பிழிந்த சாறு அரை லீற்றர், நல்லெண்ணெய் அரை லீற்றர் இரண்டையும் கலந்து அடுப்பில் வைத்து எரிக்க அடிமண்டி மெழுகு போல வரும். இதை வடிகட்டி விட்டு வல்லாரைத் தைலத்தைப் பெறலாம். இதனைத் தினந்தோறும் தலையில் தடவி வருவதுடன், சில கால இடைவெளியில் தலையில் சேர்த்தும் குளித்தும் வர மூளைத் தெளிவும், குளிர்ச்சியும் கிடைக்கும்.

இவ்வாறான மூளைத்திறன் வளர்ச்சிக்குகந்த வல்லாரையை வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதுடன் அவற்றிலிருந்து பல்வேறு உணவுகளையும் செய்து பரிமாறி அகமகிழ்வோம்.

**- V.அருந்தவம் -**

# தமிழ் மக்களைப் புரிந்துகொள்ளக் கூடிய துணைவேந்தரை உடனடியாக நியமிக்கவும்

## கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்களை சரியாகப் புரிந்து கொண்டு பல்கலைக்கழகத்தை வழி நடத்தக்கூடிய துணைவேந்தர் ஒருவரை உடன் நியமிக்குமாறு யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்.பல்லைக்கழகத்தின் துணை வேந்தரான பேராசிரியர் மோகனதாஸ் ஓய்வு பெற்றுள்ளதையடுத்து, ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்துக்குத் துணைவேந்தர் ஒருவரை நியமிக்கக்கோரி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தற்போது எமது பல்கலைக் கழகத்துக்குத் துணைவேந்தராகக் கடமையாற்றிய பேராசிரியர் சு.மோகனதாஸின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் அவர் மீண்டும் ஒருவாரம் பதில் துணை வேந்தராகக் கடமையாற்றி அந்தப் பதவிக்காலமும் நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் தற்போது துணைவேந்தர் இல்லாத நிலையில் எமது பல்கலைக் கழகம் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதியால் துணை வேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் இரட்ண ஜீவன் கூலை எமது மக்களும், மாணவர்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்கலைக்கழகத்திலே குழப்பமான சூழ் நிலையை ஏற்படுத்தி, எமது மாணவர்களது கல்வி நடவடிக்கைகளைக் குழப்ப வேண்டும் என்ற கபட நோக்கத்துக்காக இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வை வழங்காது இழுத்தடித்துச் செல்கின்றார்.

எனவே, ஜனாதிபதியின் இந்த குள்ளத்தனமான நிலைப்பாட்டினை நாம் நன்றாக உணர்ந்துள்ளோம். எமக்குப் பொருத்தமான ஒரு துணை வேந்தரை உடனடியாக நியமித்து எமது கல்விச் செயற்பாட்டை நாம் குழப்பமில்லாது மேற்கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

## மின்சார சபையின் மெத்தனப்போக்கு


யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் மின்பாவனையாளர்களில் அநேகர் மாதாந்த மின்சிட்டையில் காணப்படும் வெவ்வேறான கணக்கு விபரத்தைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாகின்றனர்.

உதாரணமாக தைமாத சிட்டையில் ஒரு குறிப்பிட்ட தொகை காணப்படுகிறது. இதனை வங்கியில் செலுத்தியபின் மாசி மாத சிட்டையில் அந்த மாத கணக்குடன் சக அடையாளத்துடன் முதல் மாத கட்டணம் வேறு தொகையாக அதிகரிப்புடன் காணப்படுகிறது. இவ்வாறான அதிகரிப்புகள் ஏன் என்பதை மக்களுக்குப் பத்திரிகை மூலம் தெரிவிப்பது உரிய தரப்பினரின் கடமையல்லவா என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் துண்டிக்கப்படுவது குறித்துப் பத்திரிகை செய்தியை வெளியிடும் சபையினர் - இதுபோன்ற விடயங்களையும் மக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அவசியமல்லவா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (110)

# டானியலின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்!




எழுத்தாளர் கே.டானியலின் இருபதாவது நினைவு தினம் இன்றாகும். இந்த வேளையில் அவரது 'பஞ்சமர்' கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர்' ஆகிய நாவல்கள் அடங்கிய தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நாவல்கள் அனைத்தும் தனித்தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன. அந்த நாவல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய பாரிய ஒரு தொகுப்பு நூலாக அவரது 20 ஆவது நினைவு நாளில், அவரது இளைய புத்ல்வன் டானியல் வசந்தனால் வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கதே!

இவரின் நாவல் படைப்புகள் இறுதி காலங்களிலும், அதற்குச் சில வருட காலம் முந்தியதாகவுமே எழுதப்பட்டன. அவரை எழுத்துலகுக்கு கொண்டு வந்தது சிறுகதைகள் தான். முந்நூறுக்கும் அதிகமான சிறுகதைகளை இவர் எழுதி இருந்ததாக அறியக் கிடைக்கிறது.

இவ்வாறு அவரால் எழுதப்பட்ட சிறுகதைகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தால் முதன் முதலாக வெளியிடப்பட்ட 'டானியல் கதைகள்' வீரசேகரி பிரசுரமாக வெளிவந்த 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளே வெளிவந்துள்ளன.

அந்த 'டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன' ஆகிய தொகுதிகளின் பிரதிகள் கூட இன்று பெறக்கூடியதாக இல்லை. இந்த இரு தொகுதிகளிலும் குறைந்தது 30 சிறுகதைகள் மட்டுமே வெளிவந்திருக்கும் நிலையில் அவரது இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளுக்கு என்ன நடந்தது?

அவரது பிற்காலத்தில் நாவல்கள் பற்றிய சிந்தனை முழுமையாக ஆட்கொண்டதால் அவரால்கூட சிறுகதைகளின் தொகுப்புகளை வெளியிட முயலவில்லை. அதேவேளை அந்தச் சிறுகதைகளின் பிரதிகள் இற்றைவரை சேதங்கஞ் போகாமல் இருக்கின்றனவா என்பதும் கேள்விக் குறியே!

இருக்கின்ற வரையில் அவரது சிறுகதைகள் அடங்கிய புதிய தொகுதிகள் மற்றும் 'டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன' தொகுதிகளின் மறு பிரசுரங்கள் வெளியிடப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

அமரர் கே.டானியல் 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி யாழ்.ஆனைக்கோட்டை, பழம் வீதி பகுதியில் பிறந்தார். 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி இந்திய தமிழகத்தில் கண்சிகிச்சை பெறச் சென்றிருந்தவேளை - சற்றும் எதிர்பாராத முறையில் மாரடைப்பால் மறைய நேர்ந்தது.

அதற்கு முன்பும், பின்பும் அவரது நிர்ணயிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் இடைநடுவே நிறுத்தப்பட்டு போயின. அதற்கு அவர் தனது முடிவு சடுதியாக ஏற்படும் என்று நினைக்காததும் காரணம்.

உதாரணத்துக்கு - அவரால் மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் என்ற அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டு, அதனூடாக 'மக்கள் இலக்கியம்' என்னும் காலாண்டு சிற்றேடும் வெளிக்கொணரப்பட்டது.

இந்த வேலைகள் அவரது மறைவின் பின்பாகத் தொடரப்படாமல் கைவிடப்பட்டுப் போயிற்று. இந்த நிலையில் அவரது நாவல்கள் மட்டுமே மறைவின் பின்பாக ஓரிரண்டு இந்தியத் தமிழக நண்பர்களால் வெளியிடப்பட்ட நிலையில் அங்கிருந்தே ஆறு நாவல்கள் அடங்கிய பாரிய தொகுப்பும் வெளியிடப்படுகிறது.

அவரது இருபதாவது நினைவாக இன்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் ஒன்று கூடும் நண்பர்களின் சிந்தனைக்கு இந்த யோசனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

அவரது சிறுகதைகளில் இதுவரை சேதமடையாமல் கிடைக்கின்ற கதைகளைத் தொகுத்து வெளியிட வேண்டும். அவரால் உருவாக்கப்பட்ட மக்கள் கலை இலக்கிய பெருமன்றத்தைப் புனரமைப்புச் செய்து, மக்கள் இலக்கிய கொள்கையை முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.

'உலகம் பூராகவும் சுரண்டலற்ற புதுமைச் சமுதாயம் ஏற்பட்டு, அதன் மூலம் இன, மொழி, சாதி பேதங்கள் தகர்க்கப்பட்டு, மனித குலம் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று பாடுபட்டதோர் சர்வதேசிய வாதி டானியல்'. அமரர் வீ.சின்னத்தம்பி கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டு இருந்தது போல், மனித குலத்தின் நாகரிக வளர்ச்சியின் உச்சமும், திருப்தியும் ஏற்படக் கூடியதான பொதுவுடமைச் சமுதாயத்தின் தோற்றத்துக்காக வாழ்நாட்களில் பெரும்பங்கை அர்ப்பணித்தவர் எழுத்தாளர் கே.டானியல்.

'பேனா பிடிப்பது மாத்திரம்தான் சமுதாயக் கடமை என்று ஒதுங்கி நின்று விடாது, அந்தக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களை நடத்திய எழுததாளரான போராளியும் வரலாற்றில் நீங்கள் ஒருவர்தான்' எழுத்தாளர் தெணியான் 06-04-1986 'ஈழமுரசு' கட்டுரையில் தெரிவித்திருப்பது அமரர் டானியலின் எழுத்தையும், வாழ்க்கையையும் இன்றைய இருபது வருடங்கள் கழிந்த நிலையிலும் புதியவர்களுக்கு ஓரளவுக்கு தரிசிக்க வைப்பதாக இருக்கும்.

இதனை அவரே ஏற்றுக்கொள்வது போல் 'தாரகை' இதழ் 12 ஜூலை-செப்ரெம்பர் 1984 இதழில் பொன். பொன்ராசா நேர்கண்டபோது -

'இலக்கியத்தால் சகலதையும் சாதிக்க முடியும். சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்றமாயைத் திரையைக் கிடித்தெறிந்துவிட்டு வெளியே வாருங்கள்' என்பதை பார்வையாளன் நிலையில் இலக்கியக்காரன் வாழாமல் பங்காளியாகவும் மாறவேண்டுமென்பதை வலியுறுத்தி இருந்தார் டானியல்.

அவரது இத்தகைய இலக்கியச் சிந்தனைகளைப் புதிய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் - சொல்லும் வகையில் 'மக்கள் இலக்கியம்' சிற்றேட்டின் மீள் வருகையும், மக்கள் கலை இலக்கிய பெருமன்றத்தின் புனருத்தாரணமும் அவசியம் என்பதைச் சுட்டிக் காட்ட நேரிடுகிறது.

'தன்னுடைய இலக்கிய சிருஷ்டிகளைப் போலவே வாழ்க்கையிலும் இலக்கிய மனிதனாக வாழ்ந்து மறைந்த மக்கள் படைப்பாளியான கே.டானியலை இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்கள் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்'

- அந்தனி ஜீவா.

'தமிழ்ச் சமூகத்தில் சாதி ஒடுக்குமுறை இருக்கும் வரை டானியல் ஏற்றிவைத்த இலக்கியக் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பது நிச்சயம்' தெளிவத்தை யோசெப் 30-3-1986 தினகரன் இதழில தெரிவித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவிதம் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விலங்குகளை அகற்றுவதற்காக பன்முகப்பட்ட வேலைத்திட்டங்களை வகுத்து வேலை செய்த டானியல் ஒரு தனிமனிதராக வாழவில்லை. இயக்கமாகவே இயங்கினார். ஒரு தொழிற்சாலை போல் அயராமல் செயற்பட்டவர்.


காலங்கள் அவ்வப்போது ஒரு சிலரைப் படைக்கிறது. தன்னை வரலாற்றில் பதித்துக் கொள்ள அத்தகைய காலமாக வாழ்கின்ற டானியலும் மக்கள் மனதில் இருந்து மறைந்து விடமாட்டார்.

- தேவிபாலிங்கம் -

# நிகழ்வின் நிழல்கள்...




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் வருடாந்த வெளியீடாக மனிதம் - இதழ் 5 இன் வெளியீட்டு விழாவில் - மலர் ஆசிரியரிடமிருந்து போதனா வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி டொக்டர் ஆர்.சிவசங்கர் சிறப்புப் பிரதியைப் பெறுவதைப் படத்தில் காணலாம். (11)



வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் சாரணர்களுக்கு சாரணிய இலட்சினை அணியும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. பருத்தித்துறைப் பிரிவு செயலாளர் எஸ்.கோணநாயகம் சாரணர் ஒருவருக்கு சின்னம் அணிவிப்பதையும், அருகில் பொறுப்பாசிரியர் சி.சரவணன் நிற்பதையும் படத்தில் காணலாம்.




அண்மையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆய்வுகூடம், நூலகம் மற்றும் வகுப்பறைத் தொகுதிகள் கொண்ட மேல்மாடிக் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன.
நூலகம், வகுப்பறைத் தொகுதிகள் கொண்ட கட்டடத்தை முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி திறந்துவைப் பதையும், அருகில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் மற்றும் கல்லூரி அதிபர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
இந்தக் கட்டடங்களுக்கான நிதியுதவியை 'நிகொட்' நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (68)



வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தொட்டிலடி சனசமூக நிலையத்தின் சன்பிறைட் விளையாட்டுக் கழக அணி வீரர்களைப் படத்தில் காணலாம். (47)

# சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதே கிராமிய அபிவிருத்தி வங்கியின் நோக்கம்

## பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் கரிகாலன்



ஒட்டுசுட்டான்—

தமிழீழத்தில் அனைத்து மாவட்டத்திலும் கிராமிய அபிவிருத்தி வங்கி தனது கிளைகளை பரப்பி வருகின்றது என பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமான கிராமிய அபிவிருத்தி வங்கியின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிராமிய அபிவிருத்தி வங்கியானது தமிழீழத்தில் அனைத்து மாவட்டத்திலும் தனது கிளைகளைப் பரப்பி குறிப்பாக - விவசாயிகளுக்காகத் தனது சேவையைச் செய்கின்ற ஒரு வங்கியாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே இன்று கற்சிலைமடு கிராமத்தில் இந்த வங்கியின் வழமைதாரர் சேவை ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் நடவடிக்கைகளை வீடுகளுக்குக் கொண்டு செல்கின்ற முறையைத் தற்போது விஸ்தரித்துக்கொண்டு செல்கின்றோம்.

இந்தச் சேவையைச் சரியான முறையில் பயன்படுத்தி, பயன் பெற வேண்டியது மக்களின் கடமையாகும். சேமிப்பு என்பது எமது சமூகத்தோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக இருக்கின்றது.

எமது முதாதையர்கள் பல வழிகளில் பணத்தைச் சேமித்துள்ளதை நாம் அறிவோம். உண்டியலில் போட்டு பணத்தைச் சேமித்து தமது குடும்பத்தில் சிக்கனத்தை கடைப்பிடித்தார்கள். தற்போது நாம் வங்கிகளைப் பயன்படுத்தத் தவறுகின்றோம். இதனால் தான் வங்கியின் செயற்பாட்டை கிராமங்களுக்குள் நகர்த்திச் செல்ல வேண்டிய தேவைகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக விவசாய உற்பத்திக்கு தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக பல தொழில்களை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால், விவசாய தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களையும், உபகரணங்களையும் குறைந்தளவு முதலீட்டோடு, அதற்கான பிணைகளையும் வைத்துக் கொண்டு குறைந்த வட்டியுடன் கடன்களை வழங்கி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்

மன்னார்—

மன்னார் - பள்ளிமுனைக் கடற்பரப்பில் கடற்தொழிலாளர்களால் வீசப்பட்ட 83 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு வலைகள் இந்திய மீனவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பள்ளிமுனைப் பகுதியில் போடப்பட்ட வலைகளை ரோலர் படகில் வந்த இந்திய மீனவர்களே அறுத்துச் சென்றனர்.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால் தொடர்ச்சியாகப் பள்ளிமுனை மீனவர்களின் மீன்பிடி வலைகள் மற்றும் ஏனைய உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றமையால், கடற்தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ரோலர் படகுகளின் பிரவேசத்தால், எதிர்நோக்கும் பல சிக்கல்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பள்ளி முனை கடற்தொழிலாலர் சங்கம் தெரிவித்துள்ளது.

# நீலியா மோட்டை கிராமத்தின் நிலை: பிரதேச செயலாளரின் விளக்கம்!

வவுனியா—

“அடிப்படை வசதிகளற்ற நிலையில் வவுனியா நீலியாமோட்டை மக்கள்” என்ற 05.03.2006 ஆம் திகதி “நமது ஈழநாடு” பத்திரிகையின் 8 ஆம் பக்கத்தில் பிரசுரமான செய்தி தொடர்பாக வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஏ. எம். எம். முஹீசீன் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நீலியா மோட்ன்டக் கிராமத்தில் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியது 1997ஆம் ஆண்டின் பின்னராகும். இதுவரை மீளக் குடியமர்ந்த குடும்பங்களாக 34 குடும்பங்கள் மட்டுமே வசித்து வருகின்றன.

இவர்களில் 28 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுவதுடன், மிகுதி 6 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், இந்த 28 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்களுக்கு சமுர்த்தி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாக 3 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது. 10×15 அளவுள்ள சமூக நிலைய மண்டபம் கட்டப்பட்டு, சிறுவர் பாடசாலை நடைபெற்று வருகிறது.

சமுர்த்தி நிதியின் மூலம் 1 1/2 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திட்டத்தின் கீழ் பயிரிடுவதற்காக தென்னங்கன்றுகள், வாழை, வெங்காயம் போன்றவை வழங்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் வீடுகள் முழுமையாகப் பாதிப்படைந்த 14 குடும்பங்களுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வீடுகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

வீடுகள் பகுதியாக பாதிப்படைந்த ஒரு குடும்பத்துக்கு 1 லட்சம் ரூபா வழங்கப்பட்டு, வீடு மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

நிகொட் திட்டத்தின் கீழ் 110×25 அளவுள்ள புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்று வவுனியா நீலியா மோட்டை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு வழங்கப்பட்டு 08.03.2006இல் வேலைகள் ஆரம்பமாகியுள்ளது.

தற்போது இந்த பாடசாலை 5 ஆம் ஆண்டு வரை சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

நியாப் திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பொதுநோக்கு மண்டபக் காணியில் ஒரு பொதுக் கிணறு ஆழமாக்குதல், பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள பொதுக்கிணறு ஆழமாக்குதல், நீலியாமோட்டை 1 ஆம் குறுக்குத்தெரு வீதி புனரமைப்பு (1 1/2 கிலோ மீற்றர்) நீலியாமோட்டை 2 ஆம் குறுக்குத் தெரு வீதி புனரமைப்பு (1/4 கிலோ மீற்றர்) நீலியாமோட்டை 4 ஆம் குறுக்குத்தெரு வீதி புனரமைப்பு (3/4 கிலோமீற்றர்) நீலியாமோட்டை கோவில் வீதி புனரமைப்பு 1/4 கிலோ மீற்றர் (மொத்தம் 3.25 கிலோமீற்றர்) ஜீவனோபாய ஆதார செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் சகல குடும்பங்களுக்கும் சுயதொழில் கடன்கள் வழங்குவதற்கு சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு சேமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அயல் கிராமமான கணேசபுரத்தில் தபால் நிலையம் திறப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் ஏற்கனவே என்னால் எடுக்கப்பட்டுள்ளது. தபால் திணைக்களத்தினாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் மக்கள் தொகை குறைவாகவுள்ளதால், அயல் கிராமமான ஆண்டியா புளியங்குளம் கிராமத்தில் நடமாடும் வைத்திய சேவை நடைபெற்று வருகின்றது. அத்துடன், கால்நடைக்கான நடமாடும் வைத்திய சேவைகள் இந்த கிராமத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மன்னார் வவுனியா பிரதான வீதியிலிருந்து நீலியாமோட்டைவரை செல்லும் பிரதான வீதி 3 கிலோமீற்றர் தூரம் செப்பனிடப்பட்டுள்ளது.

சேவாலங்கா நிறுவனத்தின் மூலம் விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் மூலம் கிராம மக்களுக்கு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் அபிவிருத்தி தேவைகளைக் கருத்திற்கொண்டு மேற்குறிப்பிட்ட இவ்வளவு வசதிகளும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் கடந்த 2002 ஆம் ஆண்டின் பின்னர் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு -

இந்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும், வவுனியா மாவட்டத்தின் நகரிலிருந்து மேற்குப் புறமாக உள்ள இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள 5 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் 5 மைல் தூரம் நடந்து சென்றே பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். வைத்திய வசதிகளோ, பலநோக்கு கூட்டுறவுச் சங்கமோ, தபாலகமோ இல்லாத நிலையில் இந்தப் பிரதேச மக்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது குறித் தே எமதுபத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதற்கு பிரதேச செயலரின் அறிக்கையில் எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசசார்பற்ற நிறுவனத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் புனரமைக்கப்படாத பாடசாலைகள்

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 9 பாடசாலைகளைப் பாதுகாப்பான இடங்களில் புதிதாக அமைப்பதற்கு 3 அரசசார்பற்ற நிறுவனங்கள் - 411,000 ரூபா நிதியை ஒதுக்கியும் எந்தவொரு பாடசாலைக் கட்டட வேலைகளும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்ட திறந்த நிலையிலுள்ள தகரக் கொட்டகைகளிலேயே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. மழை பெய்யும் காலங்களில் பாடசாலை தற்காலிக கொட்டகைகளில் மழை நீர் உட்புகுவதால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன், பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுவதால் கொட்டி சிந்தப்படும் மிகுதி உணவுகளை காகம், கோழிகள், நாய்கள் சாப்பிட்டபின் பாடசாலை தற்காலிக கட்டடங்கள், வகுப்பறைத் தளபாடங்களில் எச்சங்களைப் போடுவதால் நாளாந்தம் காலையில் கட்டடங்கள் தளபாடங்களை கழுவிய பின்னரே வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

கல்வித்திணைக்களத்தினர் சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள், ஒப்பந்தகாரர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பாடசாலைகளில் நிரந்தர கட்டடங்கள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை சமூகம் கேட்டுள்ளது.

(21)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி!

செம்பியன்பற்று—

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - இன்று மாலை 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.அம்பலவாணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வி.அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபா த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன், வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.இசையூரான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

# மன்னார் பிரதேச செயலக மண்டபத்தில் விவசாய அபிவிருத்தி கலந்துரையாடல்!

மன்னார்—

மன்னார் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் விவசாய அபிவிருத்திக்குழு கலந்துரையாடல் - நேற்றுமுன்தினம் பி.ப 2.30 மணியளவில் நடைபெற்றது.

மன்னார் அரச அதிபர் ப.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - கட்டுக்கரைக்குளம் புனரமைப்பு செய்வது தொடர்பாகவும், விவசாயிகளின் முக்கிய பிரச்சினையான நெல் கொள்வனவு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

நெல் கொள்வனவுக்கு திறைசேரி 15 மில்லியன் ரூபாவை அரச அதிபருக்கு வழங்கியுள்ளது. அந்த நிதியை மன்னார் மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பகிர்ந்தளித்து, அவர்கள் மூலமாக ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விவசாயி ஒருவருக்கு ஏக்கருக்கு 10 மூடைவிகிதம் 3 ஏக்கருக்கு 30 மூடை எனக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், மொத்தமாக 50 மில்லியன் ரூபா திறைசேரியிடம் கோரியுள்ளதாகவும், அதில் முதற்கட்டமாக 15 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மேலும், வழங்கப்படும் அடுத்த கட்ட நிதிகளின் மூலம் நெல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும் என அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள விவசாயிகளின் உற்பத்திகளை மடுவீதியால் வவுனியா - மன்னார் ஆகிய மாவட் டங்களுக்கு கொண்டு சென்று, சந்தைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் வலியுறுத்தி, இதற்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் அரச அதிபர் ப.விஸ்வலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நீக்கிலாப்பிள்ளை, மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய விரிவாக்கத் திணைக்கள உயரதிகாரிகள், கமநல கேந்திர நிலையத்தலைவர்கள், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், நீர்ப்பாசனத்திணைக்களப் பொறியியலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (மோ)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் 11 ஆவது கிளை மன்னாரில் திறந்துவைப்பு!

மன்னார்—

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் இயங்கிவரும் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி 11 ஆவது கிளை திறப்புவிழா மன்னார் அடம்பன் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் ப.மரியநாயகம் குருஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை ஜபார், ஆசிரியர் தயானந்தன், கிராமப் பெரியார் செபமாலை ஆகியோர் ஏற்றிவைத்தனர். மங்கள விளக்கை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் சி.சுதாகர், அடம்பன் காவல் பணிமனை உதவிப் பொறுப்பாளர் இலுப்பைக்கடவை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் குலம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வங்கியின் பெயர்ப் பலகையை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரைநீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தை மடுவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.யேசுதாசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து கருத்துரையை ஜேசுதாசன், சமூக பொருளாதார வங்கியின் பிரதான மேலாளர் சிறீஸ்கந்தராஜா நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி இணைப்பாளர் பாலா - பால்காந்தன் உதயகுமார் என்னும் சிறுவனின் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்றும் திறந்து வைக்கப்பட்டு சிறுவனிடம் வைப்புப் புத்தகமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள், தொண்டர்கள் பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு
- திருக்குறள்

## நமது நோக்கு

# சமாதானத்தை நிலைநிறுத்த

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னமும் ஒருவாரமே உள்ள நிலையில் - தென்னிலங்கை அரசியல் களத்தில் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம்பெறத் தொடங்கியிருக்கின்றன.

இந்த நிலையில் நோர்வே தூதரகத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் நூற்றுக்கு மேற்பட்ட பிக்குகள் - நோர்வேயை சமாதான முயற்சியிலிருந்தும், தூதரகத்தை இலங்கையில் இருந்தும் வெளியேற்றக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புலிகளுக்கு நோர்வே செங்கம்பள வரவேற்புக் கொடுத்து விட்டதாகவும், இதனால் சமாதான முயற்சிகள் தொடரமுடியாது என்பதும் தான் இவர்களின் வாதம். இது இவர்களின் ஆகப்பிந்திய காரணமேயன்றி இதற்கு முன்னர் வேறு எத்தனையோ காரணங்களைக் கூறியுள்ளனர்.

இப்போது இவர்களுக்கு கிடைத்திருக்கும் காரணம் தான் நோர்வே கொடுத்த செங்கம்பள வரவேற்பு. காலப்போக்கில் இவர்களின் எதிர்ப்பு போராட்டத்துக்கு வேறு வேறு காரணங்கள் கிடைக்கக்கூடும்.

அதேவேளை பிக்குகள், ஜே.வி.பி போன்ற தரப்புகளின் போராட்டங்கள் - அதாவது, நோர்வே சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்கள் தொடரவே செய்யும். ஏனென்றால், இவர்களின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு இவை மிக முக்கியமானவை.

அரசியல் கொள்கை ரீதியாக சிங்கள பௌத்த பேரினவாத நோக்கங்கள்தவிர வேறெதுவும் இவர்களிடம் கிடையவே கிடையாது. இதனால் தம்மை மக்கள் மத்தியில் அவ்வப்போது நினைவூட்டிக் கொள்வதற்கு இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்திக் கொண்டுதான் இருப்பர்.

இப்போது - எல்லோருக்குமே மிகவும் வாய்ப்பாக, ஒரு எதிர்ப்பொருளாக நோர்வே கிடைத்திருக்கிறது. நோர்வே புலிகளுடன் பேசினாலும் சரி, அங்கு புலிகள் சென்றாலும் சரி இவர்களுக்கு போராட்டத்துக்கான காரணம் கிடைத்துவிடும்.

ஒட்டுமொத்தத்தில் ஏதோ சிங்கள இனத்துக்கும், பௌத்த மதத்துக்கும் நோர்வே - ஜேர்மனியின் நாஸிக்கள்போல உருவெடுத்திருப்பதான தோற்றப்பாட்டை உருவாக்க இந்தச் சக்திகள் முனைகின்றன.

இதனூடே சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாக செல்வாக்குப் பெற்றுவிடலாம், இலகுவாக ஊடுருவலாம் என்பதுதான் இவர்களின் கணிப்பாகவுள்ளது.

ஆனால், இந்தக் கணிப்பு சரியானதா என்பதை நேற்று முன்தினம் தேசிய பிக்குகள்முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டம் கேள்வியெழுப்ப வைத்திருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நூறுக்கும் அதிகமான பிக்குகள்தான் பங்கேற்றனர்.

வழக்கமாக ஆயிரக்கணக்கான பிக்குகள் இப்படிப்பட்ட போராட்டங்களில் பங்கேற்பது வழக்கமே. அத்துடன், ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றனவும் இணைந்து செல்லும்.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் வாக்கு வேட்டையில் தீவிரமாக இறங்கியிருக்கும் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்றன அதிகளவில் இந்தப் போராட்டத்தில் பங்கேற்காததுடன் - மிகக் குறைந்தளவு பிக்குகளே பங்கேற்றிருப்பது இந்தப் போராட்டத்தின் வலிமையை கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

பிக்குகளின் போராட்டவலுக் குறைவடைந்ததானது முக்கியமானதாகக் கருதப்படுகின்ற அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இத்தகைய போராட்டங்களின் தாக்கம் நிச்சயம் இருக்கவே செய்யும்.

இந்தத் தேர்தலில் ஜே.வி.பியோ, ஜாதிகஹெல உறுமயவோ பெறப்போகும் அங்கீகாரம் (?) - அவர்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதுடன், அவர்களது நிலைப்பாடுகளுக்கான மக்களின் அங்கீகாரமாகவும் பிரகடனப்படுத்தப்படும்.

தேர்தலுக்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில், நோர்வேயைக் கருப்பொருளாக்கி நடத்தப்படுகின்ற போராட்டங்கள் முற்றிலும் அரசியல் தீர்வு ஒன்றை தோற்கடிப்பதற்கான நகர்வுகளாகவே கருதப்படும்.

இந்த முயற்சியில் சிறியசிறிய போராட்டங்களானாலும் அவற்றின் தாக்கம் பெரியளவிலானதாகவே இருக்கும். இதனால் - சமாதான முயற்சிகளை நிலைபெறச் செய்ய வேண்டியது தென்பகுதி வாக்காளர்களது கடமையாகவும் இருக்கிறது என்பதை மறுக்கவும்முடியாது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# சமாதானத்தைக் குழப்ப முயலும் சதிகாரர்கள் நாட்டையே நாசமாக்கிவிடுவார்கள்!

## ஊர்சுற்றியார் எழுதுவது

"ஜெனிவா மாநாட்டின் பின்னர்தான் கிழக்கிலும் வடக்கிலும் ஆட்கடத்தல், கொள்ளைகள், கொலைகள் அதிகரித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாநாட்டிலிருந்து திரும்பிய பொலிஸ்மா அதிபரும் மற்றும் அரசசார்புப் பிரதிநிதிகள் சிலரும் துணைப்படைகளின் ஆயுதங்களைப்பற்றி மாநாட்டுத் தீர்மானத்துக்கு மாறாகத் தெரிவித்த கருத்துக்களே இந்தப் பகுதிகளில் இந்தச் செயல்கள் அதிகரித்து வருவதற்குக் காரணமாக இருக்குமா?" என்று காலையில் வந்த பரதேசியார் கேட்டார்.

துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென்ற யோசனைக்கு ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்ட அரசதரப்புப் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவோ ஆயுதங்களைக் களைய முடியாதென்றோ சொல்லவில்லை. ஆனால், நாடு திரும்பியபின் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோ மற்றும் பாதுகாப்புச் செயலர் போன்றவர்கள் துணைப்படைகளின் ஆயுதக்களைவு பற்றித் தெரிவித்த கருத்துக்கள், "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்ற மாதிரி கிழக்கில் அதுவும் மட்டக்களப்புப் பகுதியில் தூண்டிவிட்டுக் கைவரிசையைக் காட்டுவதற்கு வழிவகுத்திருக்கிறது. துணைப்படைகளுக்குக் குறிப்பாக கருணாகுழுவுக்கு இந்தத் துணிச்சல் வருவதற்கு ஆயுதப்படைகளே தூண்டுகோலாக இருந்திருக்கின்றன. ஆயுதப்படைகளின் அனுசரணையில்லாமல் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக் குழுக்கள் இப்படி ஆட்கடத்தல் தாக்குதல்களில் ஈடுபட முடியாது என்று நான் சொன்னேன்.

இது மட்டுமல்ல கருணா குழுவிடமிருந்து ஆயுதங்களைக் களைவது விவேகமான செயல் அல்லவென்றும், கருணா குழுவுடன் உடன்பாடு காணப்படவேண்டுமென்றும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதிகள் சிலரது கருத்துக்கள் என்று ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இது கருணா விடுதலைப் புலிகளிடமிருந்து வெளியேறி பாதுகாப்பாக அரசபடைகளிடம் போய்ச்சேர்ந்த சமயத்திலும் இப்படியொரு கோரிக்கை விடுக்கப்பட்டது. கருணாகுழுவுடன் சமரசப் பேச்சு நடத்தப்படவேண்டுமென்றும், அந்தச் சமயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கூறியிருந்தார். கருணாவை ஒரு தனிக்குழுவாக அங்கீகரித்து வடக்கு மாகாணத்தையும் பிரித்துத் தமிழ் மக்களைப் பிளவுபடுத்த வேண்டுமென்ற சிங்களப் பேரினவாதிகளின் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இப்போது ஜெனிவாப் பேச்சின் பின்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று பரதேசியார் சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

ஜெனிவா மாநாடு முடிவடைந்து நாடு திரும்பியதுமே மாநாட்டில் கலந்து கொண்ட அரச பிரதிநிதிகள் சிலர் வெளியிட்ட கருத்துக்கள் சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவிப்பதாகவே இருந்தது. இதையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பூசிமெழுகிச் சமாதானப்படுத்தி அவரது ஜே.வி.பி, ஹெலஉறுமய தோழர்களைச் சாந்தப்படுத்தினார். ஆனால், படைத்தரப்பினதும் பாதுகாப்புச் செயலர் போன்ற அதிகாரிகளினதும் பொலிஸ் மா அதிபரின் உளறல்கள். சிங்கள ஆங்கில ஊடகங்களின் இனவாதப் பிரசாரங்கள் ஜெனிவா மாநாட்டு முடிவுகளைச் செயல்படுத்தாமல் இடையூறு செய்யலாம் என்ற துணிச்சலைக் கொடுத்தது. இதனால் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் ஆட்கடத்தல்களும், கொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்தச் செயல்களைப் புலிகள் மீது பழிபோட்டு ஊடகங்கள் திசைதிருப்பின, ஆட்கடத்தல், கொலைகள் தலையெடுத்ததும் கொள்ளைகளும் தொடர்ந்தன. பழியைப் புலிகள் மீது சுமத்திவிடலாமென எடுத்த முயற்சிகள் வெற்றியளித்தாலும் வெளி உலகம் இதை நம்பத்தயாராக இல்லை பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகளும் இனவாதக்குழுக்களின் நடவடிக்கைகளும் இனவெறி, ஊடகங்களின் பிரசாரங்களும் அவர்கள் நினைத்ததற்கு மாறாக விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவே உலகில் திசைமாறத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்காகூட விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துவதற்குச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது என்று பரதேசியார் சொன்னார்.

சிறுவர்களைப் பலவந்தமாகப் படையிற் சேர்க்கிறார்கள். ஆட்களைக் கடத்துகிறார்கள். கிழக்கில் முஸ்லிம்களைக் கடத்துகிறார்கள் வாகனங்களைப் பறிக்கிறார்கள், மக்களிடம் வரி அறவிடுகிறார்கள். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் மிரட்டிப் பணம் திரட்டுகிறார்கள். கொலை செய்கிறார்கள் என்று சில தமிழ்ப் பிரமுகர்களையும் சேர்த்து இன வெறியர்களும் ஊடகங்களும் உலக முழுவதிலும் உள்நாட்டிலுமாக பிரசாரம் செய்தும் இந்த நோக்கத்தில் அவர்கள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்தே வருகின்றன என்று சொன்னேன்.

ஜெனிவா மாநாட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றாமல் தடுப்பதற்கும், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் சமாதானப் பேச்சு நடைபெறுவதைக் குழப்புதவதற்கும் ஜனநாயகவிரோத சக்திகள் முயற்சி செய்வதாக ஸ்ரீலங்காப் பிரதமரும், பாதுகாப்புப் பிரதி அமைச்சருமான இரத்தினசிறி விக்கிரமநாயக்கா நாடாளுமன்றத்திலேயே வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், ஜனநாயக விரோத சக்திகள் எவையென்பதைத்தான் அவர் சொல்லவில்லை. சமாதான முயற்சிகளை வெளியிலிருந் துதான் குழப்பவேண்டு மென்றில்லை. சமாதான முயற்சி களைப் பாதுகாப்புப்படையினர் அனைவரும் விசுவாசமாகச் செயற்படுத்த ஒத்துழைப்பார்களென்று எதிர்பார்ப்பதும் சரியல்ல. எப்படியோ சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு சில சக்திகள் ஈடுபட்டு வருகின்றனவென்பது அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது. இந்த அரசவிரோத சக்திகள் விஷயத்தில் அரசுத் தலைவரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று பரதேசியார் மேலும் சொல்லி நடந்தார்.

அரசுக்கு இவர்கள் யார் என்பது தெரியாமலிருக்க முடியாது. தெரிந்தும் சும்மாயிருக்கக்கூடாது. கண்ணை மூடிக்கொண்டிருந்தால் நாட்டுக்கே ஆபத்தாகிவிடலாம். துணிந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். புலிகள் மீது பழியைப் போட்டு அவர்கள் தங்கள் காரியத்தை நடத்தி விடுவார்கள் என்று நின்று சொல்லிவிட்டு நடந்தார் பரதேசியார்.

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை யாருக்காவது இருக்கமானால் அது பகற்கனவாகவே முடியுமென்று திடமாகச் சொல்லிவிடலாம் என்று பழைய நண்பர் ஒருவர் நேற்றுக் காலையில் சந்தித்தபோது தெரிவித்ததாகப் பரதேசியார் சொன்னார்.

இதற்கு அவர் ஏதாவது காரணம் சொல்லியிருப்பார் அல்லது நீராவது காரணத்தைக் கேட்டுத் தெரிந்திருப்பீரே என்று கேட்டேன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றாலும் சரி சமாதானப் பேச்சில் தீர்வு என்றாலும் சரி எல்லோருமே விடுதலைப் புலிகள் தனி ஈழக்கோரிக்கையிலிருந்து விடுபடமாட்டார்கள். அவர்கள் ஜெனிவா பேச்சிலும் பண்டா - செல்வா ஒப்பந்தம் பற்றியும், திம்புப் பேச்சுகள் பற்றியும் பேசுகிறார்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகம் ஆகிய கோரிக்கைள் நிராகரிக்கப்பட்டால் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறாது என்று ஜெனிவா பேச்சுகளில் புலிகள் தெரிவித்துவிட்டனர். இதுவே அவர்களுடைய கொள்கையானால் இனி அவர்களுடன் பேசுவதில் பயனில்லை என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார்.

தனியான தமிழர் தாயகம் என்ற மாயையிலிருந்து இவர்கள் விடுபடமாட்டார்களென்றும் எழுதும் அவர் இலங்கை அரசாங்கத்துடனும், படைகளுடனும் விடுதலைப் புலிகள் போர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், சிங்களவர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டு புலிகளுக்கு இடம் கொடுக்கிறார்களென்றும், அத்துலத் முதலி வெற்றிப்பாதையில் சென்றபோது சிங்களவர்கள் தங்களுக்குள் மோதி அவர் காலை வாரியதாகவும் ரஞ்சன் விஜயரத்தினாவுக்கும் இதுவே நடந்ததென்றும் எழுதுகிறார்.

ஆனால், தமிழ் மக்கள்தான் தமிழ்ப் போராட்டத்துக்கு காலை வாரிவிடும் கோடரிக்காம்புகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பதை அவர் குறிப்பிடவில்லை என்று பரதேசியார் சொன்னார். இதனால்தான் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்று சொன்னேன் என அவர் சொன்னாராம்!

# சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இலங்கை அரசு மீதா? புலிகள் மீதா?



"புலிகளின் குரல்" அரசியல் அரங்கம் நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.

கொழும்பின் அரசியல் களத்தை ஒரு மல் யுத்த களத்துக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் முதல் சுற்றில் என்ன நடந்தது என்று பார்க்கலாம்.

மகிந்த முதல் சுற்றில் வெற்றி பெற்றதாக தோற்றம் வெளிப்பட்டிருக்கிறது.

முதல் சுற்றில் ஏற்கனவே சந்திரிகா அடி வாங்கி தோற்றிருக்கிறார். ஜே.வி.பி கூட பின் தங்கியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி முழு மையான தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அடுத்த சுற்று இனித்தான் நடக்க வுள்ளது.முதல் சுற்றில் என்ன நடந்தது? என பார்ப்போம்.

அண்மைக்காலமாக இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இலங்கையின் அனைத்துக் கட்சிகளும் ஒரே கட்சியைப் போல் மாறுகின்ற ஒரு விந்தைதான் அந்த மாற்றம். ஆளும் கட்சிகளாக எல்லா கட்சிகளும் மாறும் போக்குத்தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இது ஜனநாயகத்துக்கு எதிரான சர்வாதிகாரப் போக்கு என்று கூட சொல்ல முடியும். மக்களுடைய தெரிவுக்கும், கருத்துக்கும் வாய்ப்பில்லாமல் அனைத்துக் கட்சிகளும் ஒரே கொள்கையைக் கொண்ட ஒரே கட்சியாக மாறுகிற அபாயத்தை நோக்கி அரசாங்கம் போய்க் கொண்டிருக்கிறது.

மகிந்த இன்று சுதந்திரக் கட்சியின் தலைவரா? ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரா? என்ற கேள்வி கூட எழுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒரு துடிப்புள்ள இளைய தலைமுறை மெல்ல மெல்ல அந்தக் கட்சியை விட்டு விலகிப் போவதைப் பார்க்கிறோம்.

கரு ஜயசூரிய போன்றவர்கள் வெட்கமின்றி மகிந்தவைச் சந்தித்து எங்கள் கட்சியிலிருந்து ஆட்களை எடுக்க வேண்டாம் - நெருக்கடி வரும்போது எடுங்கள் - உங்களுக்குத் தேவைப்படும் போது நாங்கள் ஆதரவாக இருப்போம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலைமை போயிருப்பதைப் பார்க்கின்ற போது, சிங்கள அரசியலின் வங்குரோத்துத் தனம் தெரிகிறது.

'ஒரு சிங்கம் ஒரு காட்டில் வாழ்ந்து கொண்டு அனைத்து மிருகங்களையும் தனக்கு இரையாக்குகிற போது, மிருகங்கள் அனைத்தும் கூடித் தீர்மானித்தனவாம் - ஒவ்வொரு நாளைக்கு ஒரு ஆளை அனுப்புகிறோம் என்று. அதே போல் இன்று மகிந்தவிடம் போய் ஐக்கிய தேசியக் கட்சி கெஞ்ச வேண்டிய நிலை வந்திருக்கிறது.

அண்மையில் வெளியே வந்த எஸ்.பி. திஸநாயக்க கூட, ஜே.வி.பியைப் பற்றிச் சொல்லும் போது நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் தேவைப்படும் போது உங்களுக்கு உதவியாக இருப்போம் என்று சொல்லி இருக்கிறார்.

இந்தச் சிந்தனைகள் அனைத்தும் அனைத்துக் கட்சிகளுமே ஆளும் தரப்பாக மாற வேண்டும் என்ற அபாயகரமான ஜனநாயக விரோதப் போக்கை நோக்கி நாடு நகருவதாகவே பார்க்கிறோம்.

அரசியலில் என்ன நடக்கிறது? அமெரிக்காவின் விடுதலைக் குரல் எழுப்பக் கூடிய ஒரு தாராளவாதியாகக் கருதப்படுகிற நேரம் சோம்ஸ்கி, அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியும், குடியரசுக் கட்சியும் உண்மையில் வெவ்வேறு கட்சிகள் அல்ல. அவையாவும் ஒரு கட்சியின் கிளைகளே என்று கூறுவார்.

அதேபோல அரசியலில் இன்று அனைத்துக் கட்சிகளுமே ஒரே தரப்பட்ட கட்சிகளாக மாறியிருக்கிறது.

'நாங்கள் எப்போதும் கட்சி மாறுவதில்லை -எல்லோரும் ஒரே ஒரு கட்சியில் தான் இருக்கிறோம் - அது தான் ஆளும்கட்சி 'என்று இலங்கைத் தலைவர்கள் பற்றி முன்பு கேலிக்காக சொல்வார்கள். அது தான் இன்று இலங்கை அரசியலில் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறது.

அரசியல் கட்சிகளிடையே என்ன வேறுபாடு இருக்கிறது? இந்தக் கட்சிகளின் பேரினவாதச் சிந்தனையில் எவ்வித வேறு பாடும் இல்லை - தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுக்கக் கூடாது என்பதில் எவ்வித வேறுபாடும் இல்லை. போர் நிறுத்த ஒப்பந்தம் என்பதை மட்டுமே வைத்துக் கொண்டு புலிகள் போருக்கு போவதைத் தடுப்பதில் எந்தவித வேறுபாடும் இல்லை.

பொருண்மிய ரீதியாக, சர்வ தேச உலகமய மாக்கல் கோட்பாட்டில் செயற்படுவதில் ஒரு வேறுபாடும் இல்லை. ஆகவே இவை அனைத்துமே ஒரே தரப்பட்ட கட்சியாக மாறுகின்ற போது ஒரு கேள்வி எழுகிறது.

அப்படியானால் இதுவரை சொல்லப் பட்டு வந்த - அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை என்ற வாதம் கூட அடிபட்டுப்போகிறது.

இந்தியாவில் கூட ஒரு தனிப் பட்ட மத்திய கட்சி பலமாக இருக்க முடியாத நிலையில் கூட்டாட்சி வருகிறது. மாநிலங்க ளில் உள்ள தன்மைகளுக்கு ஏற்ற வகையில் - கூட்டாட்சி அமைக்க வேண்டிய நிலையில் அந்த மக்களுக்கு நன்மைகள் உள்ளதாக மாறுகிறது. ஆனால், இங்கேயோ அதற்கு மாறாக அபாயகரமானதாகமாறக் கூடியநிலை இருக்கிறது.

ஒவ்வொரு தரப்பு மக்களினது கருத்தை முன்வைக்க வேண்டிய கட்சிகள் யாவும் ஒரே கட்சியாக மாறுகின்ற போது, அந்த மக்களுக்கான வாய்ப்புகளை இழக்கக் கூடிய அபாயம் மற்றும் கட்சிகளின் பேரம் பேசக் கூடிய அபாயம் ஏற்படுகிறது.

இது ஒரு வித்தியாசமான - வேறுபாடான சூழ்நிலை. அண்மையில் வெளியான ஒரு பத்திரிகை செய்தி. 'தொண்டமான், சந்திரசேகரன், ஹக்கீம் ஆகியோர் அரசில் இணைந்து அமைச்சர்களாகும் சாத்தியம். மலையகத்தில் மண்வெட்டிச் சின்னத்திலும், வெற்றிலைச் சின்னத்திலும் இந்தக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜி.எல். பீரிஸ். ஜயலத் ஜயவர்த்தன, நவீன் திஸநாயக்க, புஞ்சினிலமைய , ரத்ன திலகசிறீ, தயா ரட்ணநாயக்க போன்ற வலிமையுள்ள தலைவர்களும் அடுத்த வாரமளவில் அந்தக் கட்சியிலிருந்து விலகுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது'-

இந்த மாதிரியான ஒரு நிலைப்பாட்டுக் கூடாக ஒரு புதிய அரசியல் தந்திரோபாயத்தை, உக்தியை மகிந்த இந்த அரசியல் அரங்கில் புகுத்துகிறார்.

அந்த உத்தி என்பது பழைய உத்திதான். ஏற்கனவே பிரேமதாஸ போன்றவர்கள் கடைப்பிடித்த உத்திதான். ஜே.வி.பியினு டைய எதிர்ப்புத் தன்மையை இல்லாதிருக்கச் செய்ய ஜே.வி.பியை தனித்துவிட்டு, ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஜே.வி.பியின் அரசியலுக்கு எதிராக செயற்படுதல் என்பது தான் அந்த உத்தி.

ஜே.வி.பியின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக, இந்தியாவை வெளியேற்ற விடுதலைப் புலிகளுடன் பிரேமதாஸ எவ்வாறு உடன் பாட்டுக்கு வந்தாரோ அதைப்போல் மகிந்த தனது உத்தி ஒன்றை வகுத்துச் செயற்படுகிறார். இந்த உத்தியின் 2 ஆவது அம்சம் மிக முக்கியமானது.

மேற்குலகமானது - ரணில் விக்கிரமசிங்கவைப் பயன்படுத்தி தேசிய இனச் சிக்கலுக்கு மந்தமான ஒரு தீர்வை முன்வைத்தார்கள். ஆனால், அதை ரணிலால் செவ்வனே செய்ய முடியவில்லை. இருந்த போதும், ரணிலை கடந்த தேர்தலின் போது மேற்குலகம் இயன்ற வரை முயற்சித்துப் பார்த்தது. ஆனால், மகிந்த முன்னால் ரணில் தோற்றுப் போனார். இன்று தனது சொந்தக் கட்சியில் செல்வாக்கை மெல்ல மெல்ல இழந்து அநாதையாகப் போகிற அபாயத்தை எதிர்கொண்டிருக்கிறார்.

இதனூடே நான் தான் அந்த அமைதித் தூதுவன் - என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று மேற்குலகத்துக்கு மகிந்த புதிய செய்தியைச் சொல்கிறார்.

அதாவது ரணிலுக்குப் பதிலாக தான் ஒரு அமைதித் தூதுவராக இந்த இடத்திலே செயற்பட்டு, புலிகளின் வெற்றியைப் பெறவிடாமல் நானும் செய்வேன். தொடர்ந்து புலிகளை சமாளித்து பேச்சு மேசையில் உட்காரவைத்து ரணில்செய்யாமல் விட்டுப்போன பணிகளை நான் செய்வேன் என் நிலைப்பாட்டை மகிந்தஎடுக்கிறார் என்ற வடிவத்தை நாம் பார்க்கிறோம்.

இந்த மகிந்தவின் உத்தியானது மிகப் பழைய - சிங்களத் தரப்பால் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற உத்திதான். இந்த உத்திகளோடு வெளிப்படுத்துகிற சிக்கலான காரணி என்னவெனில் - சிங்களத் தரப்பால் சிறுபான்மை மக்கள் என்று சொல்லப்படு கின்ற மலையகம் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பான சிங்களத்தரப்பின் அணுகு முறை எப்படியானதாக இருக்கிறது என்று பாருங்கள்...

பேரினவாதத்தின் பிரதான எதிரிகளாக தமிழ் பேசும் மக்கள் தான் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த செய்தி.

அந்தத் தமிழ் பேசும் மக்களைக்கூட தமிழ் பேசும் மக்கள், இரண்டாவதாக மலையக மக்கள், மூன்றாவதாக முஸ்லிம் மக்கள் அதற்கு அப்பால் கிறிஸ்தவத்தைப் பின்பற்றக் கூடிய மக்கள் என்று ஒரு எதிரி வர்க்கத்தை சிங்களத் தரப்பு உருவாக்கி வைத்திருக்கிறது.

எதிரிகளைக் கையாளும் விடயத்தில் - எதிரிகளையே தனக்கு தொல்லை தரக் கூடிய அணிகளை எல்லாம் தன்னோடு சேர்க்கக் கூடிய நிலையில் எதிரி இருக்கும் போது -

அதை வரவேற்று சிறுபான்மைக் கட்சிகள் என்று சொல்லக் கூடிய கட்சிகளும் அந்த நிலைக்கு இறங்கி வருகின்றன. ஆகையால் இந்தக் கட்சிகள் தங்களது பேரம் பேசும் ஆற்றலை இழந்துவிட்டார்களா? அந்த ஆற்றல் எத்தகையது? வேறு வழியின்றி தங்களது இருப்பை நிலை நாட்டத்தான் இப்படிச் செல்கின்றார்களா? என்ற கேள்வி எழுகிறது.

பேரினவாதக் கட்சிகளின் போக்கிலிருந்து விடுவிப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் உருவானது. அதன் பின்னர் அஷ்ரப் அமைச்சராக மாறி, அவரது கட்சியும் இரண்டாக உடைந்து,அவரது மனைவி அமைச்சராகி, ஹக்கீமும் அமைச்சராக மாறி அதற்குள்ளும் குழப்பங்கள் உருவாகி வருகின்றன.

கடைசியாக எல்லோரும் அமைச்சர்களாகி அரச தரப்பில் சேரும் போது - இலங்கை அரசியலில் மாற்றுக் கட்சிகளுடைய பேரம் பேசும் வலு என்பது எத்தகையது? என்ற கேள்வி உருவாகிறது.

மகிந்தவுடன் ஒரு பக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், மறுபக்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம்களின் சகல தரப்புப் பிரிவினரும் மலையக மக்களினது சகல தரப்புப் பிரதிநிதிகளும் இன்னுமே உதிரியாக உள்ள வெவ்வேறு கட்சிகளும் இணைகின்றபோது -

இலங்கை அரசியலானது ஒரே இலக்கு கொண்ட அரசியலாகும் விந்தை ஏற்படுகிறது.

இந்த அரசியல் விந்தையில் கைவிடப்பட்டவர்கள் யார் என்றால் மக்கள். பேரம் பேசும் ஆற்றலை இந்தக் கட்சிகள் இழந்து போனால் தங்கள் மக்கள் நலன் சார்ந்த விடயங்களை இந்தக் கட்சிகள் எப்படி முன்வைக்க முடியும்? அப்படி முன்வைக்கும் போது மகிந்தஎவ்வளவு தந்திரமாக காய் நகர்த்த முடியும் ஒவ்வொரு முறையும் தனது வெளிநாட்டுக் கொள்கையில் சீனா, பாகிஸ்தான், ஜப்பான், இந்தியா என்று மகிந்த தாவுவது போல் அவர் இப்போது பேரி



யல் அஷ்ரப், ஹக்கீம், அதாவுல்லா, தொண்டமான், சந்திரசேகரன் என்று தாவுகிறார்.

முதல் முறையாக சிங்களத் தரப்புக்கு இப்படி ஒரு வாய்ப்பான சூழ்நிலையை அனைத்துக் கட்சிகளுமே கொடுக்கின்றன. ஆகையால்தான், மகிந்தவுக்கு முதல் சுற்றில் வெற்றி கிடைத்திருப்பதாகக் கூறினோம். இந்தத் தொல்லை மிகுந்த காரணிகளுக்கு மத்தியிலே மிகப்பெரிய செய்தி இலங்கைத் தீவில் ஒட்டு மொத்தமாக பேரம் பேசும் ஆற்றலைத்தக்க வைத்துக்கொண்டு, மிகப்பெரிய மனித ஆற்றலையும், விடுதலைப் போராட்டத்தின் அற்புதமான தார்மீக நெறிகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு செயற்படுகிற ஒரேயொரு சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே இருக்கின்றனர்.

அதாவது இந்த இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற ஒரேஒரு மனிதராக எங்கள் தேசியத் தலைவர் இயல்பாகவே இருக்கிறார் என்பதை இந்த நடைமுறைகளிலிருந்து நீங்கள் பார்க்கலாம்.

இந்தச் செய்தி பரப்புரைக்காகவோ - புகழுரைக்காகவோ சொல்லப்படுகிறதல்ல. புத்திஜீவிகளிடமிருந்தும், அறிஞர்களிட மிருந்தும் சொல்லப்படுகின்ற செய்திதான் இது.

இந்தச் செய்தி இன்று யதார்த்த பூர்வமாக நிரூபிக்கப்பட்டி ருக்கிறது. இந்தச் செய்தியின் மூலம் தமிழ் பேசும் மக்களின் பணியும், பங்குபற்றலும், தார்மீக பொறுப்பும் எதிர்காலத்தில் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

இப்படியாக புலிகளின் தார்மீக பலம் அதிகரிக்கின்ற போது, சர்வதேச அரங்கத்தில் புலிகளை பலவீனப்படுத்துவதற்காக மீண்டும் துடிப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் பார்க்கிறோம்.

நாங்கள் மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்ற அந்த அமைப்பைக் குற்றஞ் சாட்டவில்லை. உண்மையிலேயே அது ஒரு மனிதாபிமான அமைப்பாக இருக்கக்கூடும். அதில் தெரிந்தோ, தெரியாமலோ ஒன்றிரண்டு தவறுகள் விடப்பட்டிருக்கலாம். அதை ஒட்டு மொத்த மக்களின் குரலாகச் சொல்லி விடுதலைப் போராட்டத்தின் இறுதிக்கால கட்டத்தில், இறுதிப் போருக்காக மக்களை அச்சுறுத்தி, பணம் சேகரிக்கின்றனர் என்ற அறிக்கையை வெளியிட்டு அந்த அறிக்கையை சிங்களத் தரப்பும் துணை இராணுவக் குழுக்களுமே மட்டும் பயன்படுத்த, அனுமதிக்கக்கூடிய அபாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுகளில் நாங்கள் முனைப்பாகப் போராடிய போது, சிறார் படைச்சேர்ப்பு விடயத்தை மிகப் பெரிதாக எழுப்பி ஐ.நா. சபைக்குக் கொண்டு போனது போல் தான் இன்றும் நடக்கிறது. ஆனால் ஐ.நா.சபைக்கு அந்த விடயத்தைக் கொண்டுபோன தன் விளைவாக, எத்தனை வருட காலமாக எமது சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமைகளை விளங்கப்படுத்தி அதை அவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அண்மையில் ஐ.நாவின் யுனிசெவ் அமைப்பின் பழைய அறிக்கைகளை இராணுவம் முன்னிலைப்படுத்திப் பேசியபோது, யுனிசெவ் அமைப்பினரே கண்டிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதைப் போல்தான் நிதி சேகரிப்பு என்பதை பெரிதுபடுத்தி, எமது மக்களின் இறுதிப் போராட்ட காலத்தை கொச்சைப்படுத்தும் முயற்சிக்கு தெரிந்தோ, தெரியாமலோ இந்த சர்வதேச அமைப்புகள் துணை போவதில் நாம் மனம் வருந்துகி றோம். இருந்தாலும், அவர்களுடைய பணிகளைத் தவறாக மதிப்பிடவில்லை.

உள்நாட்டிலே புலிகளின் தார்மீக வெற்றி என்பது உறுதிப்படுத்தப்படுகின்றபோது, சர்வதேசரீதியாக அழுத்தம் கொடுப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில்தான் முழுமையாக முடிவெடுக்க வேண்டிய இடைக்கால கட்டப் பொறுப்பு சர்வதேசத்தின் தலையில் விழுகிறது. மிலோசவிக்கின் இறுதி நிகழ்வைப் பார்க்கின்ற போது எமக்கு சில எண்ணங்கள் தோன்றுகின்றன. 1997ஆம் ஆண்டு மிலோசவிக் பொறுப்



பேற்றதற்குப் பின்னால், கொசோவாவில் நடந்த அட்டூழியங்களின் காரணமாக 1 இலட்சம் அல்பேனிய மக்கள் கொல்லப்பட் டனர். 5இலட்சம் பேர் காணாமல் போனார்கள். அதையடுத்து உலகம் இந்த விடயத்தில் தலையிட்டது. அதனூடே போர்க் குற்றவாளியாக மிலோசவிக் கைது செய்யப்பட்டார். பலர் தேடப்படுகின்றனர்.

150 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேர் விசாரணைக் குழுவில் பணியாற்றி, எத்தனையோ ஆயிரக்கணக்கான மில்லியன் பவுண்ஸ் செலவிடப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில்தான் மிலோசவிக் மரணம் நிகழ்ந்துள்ளது.

சர்வதேச சமூகம் இப்போது இதை எவ்வாறு அணுகப் போகிறது? புலிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அழுத்தங்களைக் கொடுத்துச் சிங்களத் தரப்புக்கு வாய்ப்பாகச் செயற்படப் போகிறதா?

அல்லது மிலோசவிக்குக்கு நடந்தது போல - 1983 ஆம் ஆண்டுகளில் ஜெயவர்த்தன நிகழ்த்திய படுகொலைகள் - பிரேமதாஸ நிகழ்த்திய படுகொலைகள் - சந்திரிகா நிகழ்த்திய படுகொலைகள் அனைத்தையும் எடுத்து இவர்கள் தொடர்பாக சர்வதேசம் நடவடிக்கை எடுக்க முன்வருமா? இந்த நடவடிக்கைக் கூடாக இனவாதத்துக்கு எதிராக இருவேறு தீர்ப்புகள் என்று இல்லாமல் ஒரு தீர்ப்பு என்ற நிலைக்கு உலகம் வருமா? என்ற செய்திகள் துலாம்பரமாக உலகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கூடாக சர்வதேச அரசியலும் இணைந்து போவதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

ஆகவே, உலகம் இன்று முடிவெடுக்க வேண்டும். புலிகளின் மீது தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் பணியைச் செய்யப் போகிறதா? அல்லது அந்தப் பணியிலிருந்து விலகி இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையாக அழுத்தம் கொடுத்து தீர்வுக்குக் கொண்டுவரப்போகிறார்களா? என்ற கேள்வி எழுந்து நிற்கிறது.

# பா.ம.கவின் தொடர் பிடிவாதத்தால் தொகுதி பங்கிடுவதில் இழுபறிநிலை



சென்னை—

குறிப்பிட்ட சில தொகுதிகளைக் கேட்டு பா.ம. க. பிடிவாதமாக இருப்பதால் தி.மு. க. கூட்டணியில் தொகுதிகள் பங்கிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தொகுதிப்பங்கீடு பேச்சுவார்த்தையின் போது தி.மு.கவுக்கு வெற்றி கிடைக்கும் தொகுதிகளையே பா.ம.க கேட்பதால் கோபம் கொண்ட தி.மு.க தலைவர் கருணாநிதி பேச்சை நிறுத்திக் கொண்டு புறப்பட்டுச் சென்றார். பா.ம.க கேட்கும் தொகுதிகளை ஒதுக்குவதற்கு தி.மு.கவில் கடும் எதிர்ப்பும் கிழம்பியுள்ளது.


தி.மு.க. கூட்டணியில் பா.ம.கவுக்கு முதலில் 25 தொகுதிகள் ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், திடீரென கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. பிரிந்து சென்று அ.தி.மு.க கூட்டணியில் 35 தொகுதிகளைப் பெற்றதால், தங்களுக்கு 36 தொகுதிகளை ஒதுக்கவேண்டுமென பா.ம.க வலியுறுத்தியது. பெரும் போராட்டத்துக்குப் பின் 31 தொகுதிகள் பா.ம.கவுக்கு ஒதுக்கப்பட்டன.

தற்போது கூட்டணிக் கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகள் என்பது தொடர்பான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கான தொகுதிகள் உறுதிசெய்யப்பட்டுவிட்டன. பா.ம. கவுக்கான தொகுதிகளை முடிவுசெய்துவிட்டு காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தி.மு.க திட்டமிட்டு இருந்தது. இந்த நிலையில் பா.ம. கவுக்கான தொகுதிகளை ஒதுக்குவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் பேச்சுவார்த்தை இழுபறியாகவே இருந்து வந்தது.

கடந்த 1996 ஆம் ஆண்டு தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பா.ம.க 25 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற தொகுதிகளை தற்போது தங்களுக்கு ஒதுக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. அவ்வாறு பா.ம.கவுக்கு அந்தத் தொகுதிகளைக் கொடுத்தால் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் தி.மு.க மற்றும் காங்கிரசுக்கு தொகுதிகளை ஒதுக்க முடியாத நிலை ஏற்படும்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி முன்னிலையில் பா.ம.கவுக்கான தொகுதிகளை ஒதுக்குவதற்கான பேச்சுவார்த்தை நடந்தது. இதில் பா.ம.க சார்பில் ஜி.கே. மணி, எம்.பி.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது குறிப்பிட்ட சில தொகுதிகளைக் கேட்டு பா.ம.கவினர் பிடிவாதமாக இருந்தனர்.

அதேநேரத்தில் பா.ம.க தலைவர் ராமதாசின் வீடு, தோட்டம், மருத்துவமனை, கல்லூரி என்பவையுள்ள திண்டிவனம் தொகுதியைத் தர தி.மு.க முன்வந்தும் - அந்தத் தொகுதியை ஏற்க பா.ம.க மறுத்துள்ளது. தைரியமிருந்தால் திண்டிவனத்தில் பா.ம.க நின்று பார்க்கட்டும். இங்கு அந்தக் கட்சியை பலம் இழக்கச் செய்வோம் என கடந்த வாரம் கூட பொதுக் கூட்ட மொன்றில் அ.தி.மு.க அமைச்சர் சி.வி சண் முகம் சவால் விட்டிருந்தார்.



இவ்வாறு வேண்டிய தொகுதிகளைக் கேட்டு பிடிவாதமாக பா.ம.கவினர் இருந்ததால் தி.மு.க தலைவர் கருணநிதி பேச்சுவார்த்தையின் இடையிலேயே நீங்களே பேசிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார்.


கருணாநிதி கோபத்துடன் சென்றபின், வீரபாண்டி, ஆறுமுகம், துரைமுருகன் ஆகியோர் பா.ம.கவினருடன் பேச்சு நடத்தினர். இரவு 10.30 மணிவரை பேசியும் எந்தப் பலனும் ஏற்படவில்லை. தி.மு.க தரப்பில் இதற்கு மேல் விட்டுக்கொடுக்க முடியாது என உறுதியாக தெரிவிக்கப்பட்டது. இதன்பின், ராமதாஸிடம் பேசிவிட்டு வருவதாக கூறி ஜி.கே.மணியும், ஏ.கே. மூர்த்தியும் கூறினர்.

பா.ம.கவுக்கான தொகுதிகள் உறுதிசெய்யப்படாத நிலையில் காங்கிரசுக்கான 48 தொகுதிகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த முடியாத நிலையில் தி.மு.க தற்போது உள்ளது.

எனினும், பா.ம.க உடன்பட்டு வராவிட்டால் காங்கிர சுக்கான தொகுதிகளைப் பேசி முடித்து அறிவிக்கவும் தி.மு.க தயாராகவுள்ளது. எனவே, தற்போது முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு பா.ம. க. தள்ளப்பட்டுள்ளது.

## உலக அரங்கில்

### பாகிஸ்தானில் பறவைக்காய்ச்சல்



இஸ்லாமாபாத்—

பாகிஸ்தானில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதை அந்தநாடு முதற்தடவையாக உறுதிப்படுத்தியுள்ளது. வடக்கு பாகிஸ்தானிலுள்ள இரண்டு கோழிப்பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டதையடுத்து அந்த இரண்டு கோழிப்பண்ணைகளும் பயன்பாட்டுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்தியாவின் அயல் நாடுகளான இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டு அங்கு கோழி சார்ந்த உணவு வகைகளின் பயன்பாடு குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா விசாரணை!



ஈராக்—

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஈராக்கியப் பொதுமக்கள் 15 பேரை தமது படையினர் படுகொலை செய்தனர் எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை விசாரணை செய்துவருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் 7 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 15 பேர் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டனரென கடும் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஈரான் எச்சரிக்கை!



தெஹ்ரான்—

அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாகக் குற்றம் சுமத்தி அவமதித்து வருவதற்காக மேலை நாடுகள் ஈரானிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ஈரானிடம் இருந்து சலுகைகளைப் பெறலாம் என்பதற்காக தவறான பிரசாரங்களை மேற்கொண்டால் - எதிர்காலத்தில் அவர்கள் வருத்தப்பட நேரிடும் என்று ஈரான் ஜனாதிபதி முகமட் அகமதினிஜாத் எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் ஈரான் தனது புத்தாண்டைக் கொண்டாடியதை முன்னிட்டு ஈரானிய தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### சதாமை உளவு பார்த்த வெளியுறவு அமைச்சர்

பாக்தாத்—

சதாமின் ஆட்சியை ஈராக்கிலிருந்து அகற்றுவதற்கு அவரது வெளியுறவு அமைச்சர் நாஜி சாப்ரி அமெரிக்க சி.ஐ.ஏ. புலனாய்வு அமைப்புக்கு தகவல் வழங்கிவந்ததாக, சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளதென அமெரிக்க தொலைக்காட்சி கூறியுள்ளது.

சதாமின் நடவடிக்கைகள், பேரழிவு ஆயுதங்களை அவர் தயாரித்து வருவது உட்பட பல்வேறு தகவல்களை இவர் வழங்கியதுடன், இவருக்கு பிரான்ஸ் நிறுவனமும் உதவியாக இருந்தது. அத்துடன், இவர் தனது தகவல்களுக்காக 46 இலட்சத்தை அமெரிக்காவிடமிருந்து பெற்றுள்ளாராம்.

## விஜயகாந்தின் பேச்சுக் குறித்து அலட்டிக் கொள்வதில்லையாம்!

### கருணாநிதி தெரிவிப்பு

சென்னை—

விஜயகாந்த் பேச்சு குறித்து அலட்டிக் கொள்வதில்லையென தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வழங்கிய பேட்டியில் கூறியிருப்பதாவது -

கேள்வி:- ஒருவர்(விஜயகாந்) தி.மு.க, அ.தி.மு.க இரண்டுமே ஊழல் கட்சிகள் என்கிறார். யாருடனும் கூட்டணி வைத்துக்கொள்ள மாட்டேன் என்று முழக்கமிடுகிறார். ஆட்சியில் பங்கு கொடுத்தால் கூட்டணிக்கு தயார் என்கிறார். ஆட்சியிலே பங்கு கிடைத்தால் ஊழல் மறைந்து விடுமா?

கருணாநிதி:- நான் சிலரது செயற்பாடுகள் பற்றி விமர்சிக்கவோ,கருத்து வெளியிடவோ விரும்பவில்லை என்று பலமுறை கூறிய போதும் - திரும்பத் திரும்ப அவர்களைப் பற்றி என்னிடம் கேள்வி கேட்கப்படுகிறது. நீங்கள் யாரைப்பற்றி கேள்வி கேட்டு இருக்கிறீர்களோ அவர் மதுரையில் முதன் முதலாக கட்சி தொடங்கிய போது வாழ்த்து அனுப்பியவன் நான். அவர்களுக்கும் கருத்துக்களை பேச உரிமையுண்டு.

தற்போது அவர்கள் என்ன தான் என்னைப் பற்றித் தாக்கிப் பேசிய போதிலும், கடந்த காலத்தில் என்னைப் புகழந்து பேசிய வார்த்தைகளை நினைத்துக்கொண்டு இப்போது பேசுவதைப் பற்றி நான் அதிகமாக அலட்டிக்கொள்வது கிடையாது என கருணாநிதி தெரிவித்தார்.

## கூட்டணியில் சேர்க்குமாறு கூறியும் பிரதான கட்சிகள் புறக்கணித்து விட்டன

### புதிய தமிழகம் தலைவர் கவலை!

மதுரை—

தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை முதல்வராக்கும் நோக்கத்தில் 150 தொகுதிகளில் புதிய தமிழகம் தனித்துப் போட்டியிட இருப்பதாக அதன் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக மதுரையில் அவர் கூறியதாவது -

தாழ்த்தப்பட்ட மக்களின் மரியாதை, அரசியல்பங்கு, ஒட்டுமொத்த சமுதாய இணக்கம் ஆகிய கோட்பாடுகளை ஏற்கும் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைக்கபுதிய தமிழகம் முயன்றது. அ.தி.மு.க., தி.மு.க. போன்ற பிரதான கட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆனால் அரசியலில் உரிய பங்கைத் தர மறுக்கின்றன.

எதிர்வரும் தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருரை முதல்வராக்கும் நோக்கத்தில் 25 சதவீத வாக்குகளை ஒருமுகப்படுத்த 150 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுவோம்.

கூட்டணியில் சேர்க்கும்படி கோரிக்கை விடுத்தும்கூட அ.தி.மு.க.,தி.மு.க. போன்ற பிரதான கட்சிகள் எங்களைப் புறக்கணித்து விட்டன என்று கிருஷ்ணசாமி கூறினார்.




## ஆண்டிப்பட்டியில் பிரசாரத்தை தொடங்குகிறார் ஜெயலலிதா



தேனி—

ஆண்டிப்பட்டி தொகுதியில் இருந்து தேர்தல் பிரசாரத்தை தொடங்க முதல்வர் ஜெயலலிதா திட்டமிட்டுள்ளார். தேனி மாவட்டத்தில் அவர் 4 நாள் பிரசாரம் செய்வதோடு 6 பிரசார பொதுக் கூட்டங்களிலும் பங்கேற்றுப் பேசவுள்ளார்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் போட்டியிடவுள்ளார். அங்கு அவர் தேர்தல் பிரசாரம் செய்ய வசதியாக பயணத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா ஆண்டிப்பட்டித் தொகுதியிலிருந்து தேர்தல் பிரசாரத்தை தொடங்க திட்டமிட்டுள் ளார்.

முதல் கட்டமாக அவர் தேனி மாவட்டத்தில் நான்கு நாள் பிரசாரம் செய்வார். ஆண்டிப் பட்டித் தொகுதியில் மட்டும் இரண்டு நாள் பிரசாரம் செய்யும் ஜெயலலிதா - ஆண்டிப்பட்டி, கண்டமனூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கூட்டங்களில் பேசுவார். பெரியகுளம் தேனி தொகுதியில் ஒரு நாளும், போடி, கம்பம் தொகுதிகளில் ஒருநாளும் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பொதுக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார். ஏப்ரல் முதல் வாரத்தில் அவரது பிரசாரம் தொடங்கும். பயண திகதி இந்த மாத இறுதிக்குள் முடிவுசெய்யப்பட்டு விடும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. தேனி மாவட்டத்துக்கு தேர்தல் பிரச்சாரத்துக்கு வரும் முதல்வர், கடந்த தேர்தலின் போது தங்கியிருந்த பங்களாவிலேயே மீண்டும் தங்கவுள்ளார்.

## தொகுதிப் பங்கீடு குறித்து தொடர்ந்தும் அ.தி.மு.க., ம.தி.மு.க. பேச்சுவார்த்தை

சென்னை—

தொகுதிப் பங்கீடு குறித்து அ.தி.மு.கவுடன் ம.தி.மு.க. தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் நடந்த பேச்சுக்கள் சுமுகமாக முடிவடைந்ததாக தெரியவருகிறது.

சட்டசபைத் தேர்தலுக்கு அமைக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு 35 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிகள் எவை என்று முடிவு செய்யப் பேச்சுக்கள் நடந்து வருகிறது. ஏற்கனவே பல சுற்றுக்கள் அவர்கள் பேசி விட்டனர். ஆனால், இன்னும் முடிவு ஏற்படவில்லை. நேற்று முன்தினம் இறுதிக்கட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

தொகுதிப் பங்கீடு குறித்து நிருபர்களிடம் ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன் கூறும்போது, பேச்சுகள் சுமுகமாக நடந்தன. எங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளோம். அ.தி.மு.கவின் கருத்து எங்களுக்குத் திருப்திகரமாக உள்ளது என்று கூறினார்.

அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் கூறும் போது -

நாங்கள் பலமுறை பேசியிருக்கிறோம். ஒவ்வொரு முறையும் மகிழ்சியுடன் சந்தித்துப் பேசுகிறோம். எந்தெந்தத் தொகுதிகள் என்பதை முதலமைச்சர் விரைவில் அறிவிப்பார் என்று கூறினார்.

நேற்று முன்தினம் நடந்த பேச்சில் ம.தி.மு.க. தொகுதிகள் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் இந்தக் கூட்ணியிலுள்ள விடுதலைச் சிறுத்தைக்கான 9 தொகுதிகள் எவை என்றும் முடிவாகிவிட்டது.

அ.தி.மு.கவுடன் திண்டிவனம் ராமமூர்த்தியின் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ், டி.ராஜேந்தரின் அனைத்திந்திய லட்சிய தி.மு.க. ஆகிய கட்சிகள் தொகுதிப் பங்கீடு குறித்து ஏற்கனவே பேசியுள்ளன. எனினும், இந்தக் கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவக் காவலரண் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கு – மணற்காடு பகுதியில் இராணுவக்காலரண்மீது நேற்று நண்பகல் ஆயுததாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவித்தன.

நண்பகல் 12.45 மணியளவில் மணற்காடு 6 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள காவலரண் மீது தொலைவில் இருந்து இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பதிலுக்கு இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதையடுத்து ஆயுததாரிகள் தப்பிச் சென்றதாகவும் இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின் பின்னர் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்திய பகுதியில் தேடுதல் மேற்கொண்ட படையினர் ரி.56ரக துப்பாக்கி ஒன்றைக் கண்டெடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற பின்னர் மணற்காடு பகுதிக்கு மண் ஏற்றச்சென்ற 50க்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களை படையினர் நீண்டநேரம் தடுத்து வைத்து சோதனையிட்ட பின்னர் விடுவித்ததாக தெரிவிக்கப்படுகிறது

# வடமராட்சிக் கடலில் படகுடன் ஐவர் கைது!

பருத்தித்துறை—

பருத்தித்துறை – முனை கடற்பகுதியில் வெடிபொருட்களுடன் படகு ஒன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடுக்கடலில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை சோதனையிட்டவேளை அதனுள்ளிருந்து 20 ஜெலிக்நைட் குச்சிகள் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது வடகடலில் இருந்து ஐந்துபேர் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, வடமராட்சிக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுலைப்புலிகள் உறுப்பினர்கள் இல்லை என விடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## யுத்த....

ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னரான அரசாங்கத்தின் போர் நிறுத்த ஒப்பந்த மீறல் பட்டியலை நோர்வே பிரதிநிதிகளிடம் கையளித்திருக்கிறோம்.

அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறோம். என்று விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியுள்ளார்.

## வடக்கு....

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஏழு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றியதாக தெரிய வருகிறது.

ஜே.வி.பி,சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அதாவுல்லாவின் தேசிய முஸ்லிம் காங்கிரஸ், க.விக்னேஸ்வரனின் அகில இலங்கை தமிழ் ஐக்கிய முன்னணி, கருணாகுழு, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆகியன இந்தக் கூட்டணியில் இணைந்து கொண்டன.

வடக்கையும் கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும் என்று இந்தக்கூட்டத்தில் பங்கு பற்றியோர் கருத்து தெரிவித்தனர்.

இதற்காகவே கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டணி என்ற பெயரில் இயங்குவதெனவும் இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சி, தேசிய ஐக்கியமுன்னணி, ஜாதிகஹெல உறுமய, அனைத்து பிக்குகள் தேசிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் எனினும் அவை இந்தக் கூட்டத்தில் பங்கேற்றகவில்லை என்றும் கூறப்படுகின்றது.

## வவுனியாவில்....

கொல்லப்பட்டவர்களாவர்.

வீட்டுக்கு வெளியே நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தவேளை வேகமாக வந்த வெள்ளை வானில் இருந்த இனந்தெரியாத நபர்கள் இவர்கள்மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எம்.குணம் ரத்தினம் ஸ்தலத்திலேயே பலியானார்.

சாரதியான யூட் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும்போது வழியில் உயிரிழந்தார்.

இவர்கள் இருவரின் சடலங்களும் பிரேதபரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மோ 3)

## கடற்படையினரின்...

தேவை உள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் முறுகல் நிலையைத் தடுப்பதற்காக கடல் வலயத்தில் எல்லையை நிர்ணயிக்க வேண்டிய தேவை உள்ளது.

இதற்குத் தீர்வு காணாத நிலையில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படக்கூடிய அபாய நிலையும் ஏற்படலாம்.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்வதை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கடந்த 14 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி உள்நுழைந்த சிறிலங்கா ஊர்காவல் படையினரை விடுவிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

இதனிடையே கடற்படையினரால் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இடங்களை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர் பார்வையிட்டார்.

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

நமது ஈழநாடு பத்திரிகையில் உங்களின் ஆக்கங்களும் வெளிவரவேண்டுமா?

சுயமாக எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரைகள், துனுக்கு கள் எதுவாயினும் எமக்கு அனுப்பிவையுங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும்.

எழுதி அனுப்பவேண்டிய முகவரி:
பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# தொழில்நுட்ப கல்லூரி மாணவர் மிரட்டல் யாழ்ப்பாண கல்விச் சமூகம் கண்டனம்

யாழ்ப்பாணம்—

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற தியாகதீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இராணுவ அதிகாரிகள் அத்துமீறி தொழில்நுட்ப நிறுவனத்தினுள் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்த மைக்கு குடாநாட்டு கல்விச் சமூகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட உயர் கல்விநிறுவனங்களின் மாணவர் அமையம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.குடாநாட்டு மாணவர்களை ஆயுத முனையில் அடக்கிவிட யாழ். குடாநாட்டு ஆக்கிரமிப்பு படைகளின் தளபதி சந்திரசிறி கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறார்.

மாணவர்கள் எழுச்சி நிகழ்வுகளில் பங்குபற்றக்கூடாதுதென்றும், பொது இடங்களில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றக்கூடாது எனவும் புதிய சட்டங்களை வகுத்து வருகிறார்.

இவருக்கு வெறுமனே இங்குள்ள படையினரை கட்டுப்படுத்தும் அதிகாரம் மட்டுமேயுள்ளது.

இருந்தும் மக்கள், மாணவர்கள் மீதும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்ற ஒரு நப்பாசையும் இந்த ஆக்கிரமிப்பு இராணுவத் தளபதிக்கு இருந்துகொண்டேவருகிறது என அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

## தாக்குதல்....

அது விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமாகவே நாங்கள் கருதுவோம்.

இத்தகைய போர்ச்சூழலும், வன்முறையும் உருவானால் அமைதி முயற்சிகளை அவை தடுக்கும். அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கும்.

ஜெனிவாவின் முதல்சுற்றுப் பேச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி துணை ஆயுதக் குழுவினரது ஆயுதங்கள் களையப்பட வேண்டும். இல்லையெனில், எமது தலைமைப்பீடம் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை ஒத்திப்போடலாம். அல்லது பேச்சுக்களில் பங்கேற்றாலும் முதல் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட முடிவைச் செயற்படுத்தவே வலியுறுத்துவோம்.

ஆகையால், துணை ஆயுதக் குழுவினரது ஆயுதங்கள் களையப்படாத நிலையில் பேச்சுக்களில் எதுவித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

ஏப்ரல் பேச்சுக்கள் நடைபெற்றால் அதில் மீனவர்களின் மீன்பிடி உரிமை தொடர்பாகவும் விவாதிக்கப்படக் கூடும்.

அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு வன்முறையற்ற சூழலும், இயல்பு வாழ்க்கையும் உருவாக்கப்படுதல் அவசியமானது.

ஜே.வி.பி மற்றும் பௌத்த பிக்குகளின் நெருக்குவாரங்களுடன் செயற்படுதலை விட ஐக்கிய தேசியக் கட்சியுடன் மகிந்த ராஜபக்ஷ இணைந்து செயற்படலாம்.

தமிழர்களின் தன்னாட்சி உரிமையை மகிந்த ராஜபக்ஷ அங்கீகரிக்காத வரையில் எதுவித அரசியல் தீர்வுக்கான வாய்ப்புகளும் இல்லை.

தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை நிராகரிக்கப்பட்டால் எமது புற சுயநிர்ணய உரிமைக்காக - எமது சுதந்திரத் தாயகத்தை அமைக்க நாம் நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிக்....

ஆரம்ப நாள் முதல் தினமும் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டுவந்தது.

தினமும் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்ட சம்பவத்தை அறிந்த படையினர் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தின் நுழைவாயிலுக்கு முன்பாக பெருமளவில் குவிக்கப்பட்டு மாணவர்கள், விரிவுரையாளர்களை அச்சுறுத்தினர்.

தமிழீழ தேசியக் கொடி ஏற்றியவர்கள் விபரமும், இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்த மாணவர்களின் விபரங்களையும் தமக்குத் தரவேண்டும் என்றும், தேசியக்கொடியை இறக்க வேண்டும் என்றும் வற்புறுத்திய படையினர் - இதுபோன்ற சம்பவங்களை அனுமதிக்கமுடியாது எனவும், மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் ஆயுத முனையில் பயமுறுத்தினர்.

அத்துடன் அவர்கள் மீது தாக்குதல் நடத்த படையினர் முற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் ஆயுதத்துடனும், குண்டாந் தடிகளுடனும் வளாகத்தில் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தியபோதும் - மாணவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டதால் அந்த இடத்தில் பெரும் பதற்ற ம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அறிந்த போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான முறுகல் நிலையை தவிர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்தின் பின்னர் கண்காணிப்புக் குழுவினரின் கோரிக்கையை அடுத்து அந்த இடத்தை விட்டு படையினர் அகன்று சென்றனர்.

அதேவேளை படையினர் அந்தப் பகுதியில் ஒட்டப்பட்ட அன்னை பூபதியின் சுவரொட்டிகளை அகற்றிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

# உரும்பிராய் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம்—

உரும்பிராய்- காளிகோவிலடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

உரும்பிராய்- பலாலி வீதியில் காளிகோவி லடிப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே மோதிக்கொண்டன. இதன்போது ஒரு மோட்டார் சைக்களில் வந்த ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றய மூவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த அ.செல்வரஞ்சன் (வயது46) என்பவரே உயிரிழந்தவராவார். மேலும் உரும்பிராயைச் சேர்ந்த மகேஸ்வரன் பிரசாத் (வயது 25) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஏனைய இருவரும் காயமுற்ற போதும் வைத்தியாசலையில் அனுமதிக்கப்படவில்லை என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

# திருகோணமலைத் தாக்குதலுக்கு துரைரட்ணசிங்கம் கண்டனம்!

திருகோணமலை—

திருகோணமலை கடற் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடலோரக் கிராமங்கள் மீதான கடற்படையினரின் தாக்குதலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரட்ணசிங்கம் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

சூடைக்குடா, கேணித்தீவு, சம்பூர், கடற்கரைச் சேனை ஆகிய கடலோரக் கிராமங்களில் 2 ஆம் நாளாக நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணி முதல் கடற்படையினர் தொடர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் சம்பூர் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் கிராமங்களில் வாழும் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடற்படையின் தாக்குதால் செல்களும், ரவைகளும் பழைய சூடைக்குடா கிராமத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் மீள அமைக்கப்பட்ட சூடைக்குடா கிராமத்தில் விழுந்துள்ளன. சுனாமியால் சூடைக்குடா கிராம மக்கள் அனைவருமே அங்கிருந்து வெளியேறியவர்கள்.

பொதுமக்கள் மீதான விருப்பந்தகாத இந்தத் தாக்குதலை நிறுத்த அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச படைகளின் இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தாவிட்டால்- சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எவரும்....

பொறுப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்களை சரியான பாதையில் இட்டுச் செல்லும் நோக்கத்துடன் - நேர்மையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளும், முயற்சிகளும் அரசாங்கத்தின் தற்போதைய நகர்வு காரணமாக பயனற்றுப் போயுள்ளதாகவும் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

## 28 நிபந்தனைகள்...

கலந்துகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆட்சேர்ப்புக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

படையினர்மீது மக்கள் தாக்குதல் நடத்தாமல் இருப்பதை விடுதலைப் புலிகள் உறுதிசெய்யவேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் விடுதலைப் புலி போராளிகள் தொலைத்தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்த முடியாது.

அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகள் சிறப்பு அடையாள அட்டைகளை வைத்திருத்தல் அவசியம்.

போராளிகளின் வாகனங்கள் தேவையேற்படும்போது சோதனை செய்யப்படும்.

இவ்வாறான 28 நிபந்தனைகளை மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் விதித்ததாலேயே போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதை நிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
புதிய பிரிவுகள் ஆரம்பம் 26-03-2006

Diploma in
GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment

Advanced Diploma in
Server based Web Development
- Apachel/PHP/MySQL Installation & Configuration
- Dynamic Web based World
- PHP/MySQL in Depth
- Real Time Project

மேலதிக விபரங்களுக்கு:
Director, AIMS, Jaffna
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.